" இவ்வளவும் எப்படி வந்தது, எவ்வளவு மூலதனம் உண்மையில் போடப்பட்டது என்பதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தேயிலைத் தோட்டங்கள், காபி, மற்ற தோட்டங்கள் விஷயத்தில் தொழிற்சாலையில் போட்ட மூலதனம் மாதிரி போடப்படவில்லை. ஏராளமான பணம் செலவழித்து இயந்திரங்களை வாங்கி தொழிற்சாலையை ஆரம்பிப்பது போல தோட்டங்களுக்குச் செலவிடப்படவில்லை.

16th February 1955] [Sri M. Kalyanasundaram]

"சென்ற 100 அல்லது 200 வருஷ சரித்திரத்தைப் பார்த்தால், தேயிலைத் தோட்டங்கள் எப்படி வளர்ந்திருக்கின்றன என்பதை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். காப்பித் தோட்டங்கள் விஷயத்திலாவது சில முயற்சிகள் ஆரம்பத்தில் எடுக்கவேண்டியிருந்தது. வெளிநாட்டுக்குச் சென்ற ஒருவர் அங்கிருந்து காப்பிச் செடிகளைக் கொண்டுவந்து நம் நாட்டிலே அது விளையுமா என்று பரீக்ஷை செய்த பிறகு உற்பத்தி செய்யவேண்டிய சங்கடம் ஏற்பட்டது. ஆனால் தேயிலை விஷயத்தில் அப்படிப்பட்ட சங்கடம் இருக்கவில்லை. இந்த நாட்டிலேயே இயற்கையாக தேயிலைச் செடி விளைந்திருந்தது என்று கண்டுபிடித்தது ஒன்றுதான் வெள்ளைக்காரர்கள் செய்தது. வாஸ்கோடி காமா தப்பித் தடவி இந்தியாவைக் கண்டுபிடித்ததுபோல, இங்குள்ள மலைச்சாரல் பிரதேசங்களில் தேயிலைச் செடிகள் இருந்திருப்பதைத்தான் வெள்ளக்கார முதலாளிகள் கண்டுபிடித்தார்களே தவிர, தேயிலை தோட்டங்கள் விஷயத்தில் அவர்கள் ஏதோ அதிகமாகச் செய்துவிட்டார்கள் என்று யாரேனும் நினைத்துக்கொண்டிருந்தால், அவர்கள் நம்நாட்டு தேசீய தொழில் வளர்ச்சிச் சரித்திரத்தின் உண்மையைத் தெரிந்துக்கொள்ளவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

"ஒரு பவுன் மூலதனத்தையாவது இங்கு கொண்டு வந்து மூலதனமாகப் போட்டு இந்த நாட்டில் தோட்டத் தொழிலை வெள்ளைக்காரர்கள் அபிவிருத்தி செய்துவிடவில்லை. அதற்குப் பதிலாக இந்த நாட்டில் ஏற்கெனவே இருந்திருக்கக்கூடிய செடிகளைக்கொண்டே, இங்கிருக்கக்கூடிய தமிழர், கன்னடியர், மலையாளிகள் ஆகியவர்களையும்—அவர்களில் ஹரிஜனங்களும் இருக்கலாம், மற்றவர்களும் இருக்கலாம்—சேர்த்து வெள்ளைக்கார முதலாளிகள் தோட்டங்களைத் தயார் செய்துவந்திருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். அவர்கள் அதில் அதிகமாக மூலதனம் போடவில்லை. இயற்கையாக வசித்துக்கொண்டிருந்த மலை ஜாதியினரை அடித்து விரட்டிவிட்டு அவர்களிடமிருந்து நிலத்தைப் பிடுங்கிக்கொண்டு அந்த இடத்தில் வெள்ளைக்காரர்கள் தேயிலை, காப்பித் தோட்டங்களை அமைத்திருக்கிறார்கள். பழைய காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் நான் அங்கு சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது என்னுடைய கவனத்திற்கு வந்தது. அந்தக் காலத்தில் இந்தியர்களையும் மலை ஜாதியினரையும் வெள்ளைக்காரர்கள் எப்படிச் சுரண்டிக்கொண்டிருந்தார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ள சிறு சம்பவமொன்றை இங்கு சொல்ல விரும்புகிறேன்.

"தோட்ட முதலாளிகள் பெரும்பாலும் வெள்ளைக்காரர்கள். தோட்டங்களுக்குள் அவர்கள் பங்களாக்களைக் கட்டி, வேலி போட்டு அடைத்து சாகுபடிக்குக் கொண்டுவந்துவிட்டு காவல் வைப்பதில்லை. உள்ளே நுழைந்து எதையும் எடுத்துக்கொண்டு போகாமல் இருப்பதற்குக் காவல் வைக்கவேண்டிய சிரமம் இல்லாமல் ஜன்னல்களுக்கு நேரே ஒரு துப்பாக்கியைத் தொங்கவிட்டுவிடுவார்கள். அந்தத் துப்பாக்கியைக் கண்டு மலைஜாதியினர் பயந்துகொண்டு, அதற்கு உள்ளேகூட போவதில்லையாம். அந்த மாதிரி மலை ஜாதியினரை பயமுறுத்தியும், அடிமைத்தனமாக அவர்களை நடத்தியும், தொழிலாளர்களை உபயோகித்து அந்தத் தோட்டத்தை வளர்த்து அதில் கிடைக்கக்கூடிய லாபத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருக்கி, இப்படிப்பட்ட தோட்டங்கள் வளர்ந்திருக்கின்றனவே தவிர, தொழிற்சாலை, ரயில்வே ஆகியவைகளுக்கு முதன்முதலில் இயந்திரங்களை வாங்கி ஆரம்பிப்பதுபோல, தேயிலைத் தோட்டங்கள் விஷயத்தில் பிரிட்டனிலிருந்து வெள்ளைக்காரர்கள் மூலதனத்தைக் கொண்டு வந்து போட்டு எதையாவது கட்டினார்கள் என்று யாரும் நினைத்துக்கொண்டிருக்கவேண்டாம். அவர்கள் கையிலிருந்து ஒரு காலணாக்கூட செலவு செய்துவிடவில்லை. அரசியல் அதிகாரம் ஒன்றை மட்டும் உபயோகித்து பல லட்சக்கணக்கான மைல் விஸ்தீரணமுள்ள மலைச்சாரல்களை வெள்ளைக்காரர்கள் எடுத்துக்கொண்டு, நம் நாட்டுத் தொழிலாளர்களை மிருகத்தனமாக நடத்தி, அவர்கள் மனிதர்களாக வாழமுடியாத அளவுக்குக் அவர்களுக்கு கூலி கொடுத்து தோட்டத்தை வளர்த்திருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்கவேண்டும்.

"பூர்வ சரித்திரத்தைத் தெரிந்துகொண்டால்தான் இப்பொழுது அதிலிருந்து எவ்வளவு லாபம் கிடைக்கிறது, எப்படி அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்று புரிந்துகொண்டால்தான் விருப்பு வெறுப்பில்லாமல் இந்தப் பிரச்னையை நாம் ஆலோசனை செய்யமுடியும். சில அங்கத்தினர்கள் நேற்று பேசக்கூடிய காலத்தில் இன வெறியை நாம் தூண்டக்கூடாதென்று சொன்னார்கள். இன வெறியைத் தூண்டவேண்டுமென்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது. இன வெறி, ஜாதி வெறி, மத வெறி ஆகியவைகள் கம்யூனிஸ்டு கட்சிக்குப் பரம எதிரிகள். ஆகவே, நாங்கள் இன வெறியைத்தூண்ட விரும்பவில்லை. ஆனால், நம் நாட்டின் செல்வத்தை பிறர் அனுவசியமாக பிற நாடுகளுக்கு எடுத்துக்கொண்டு போவதை பார்த்துக்கொண்டிருக்கும்போது நாம் அதை அனுமதிக்கக்கூடாது, நம்முடைய தேசத்தை நஷ்டப்படுத்தக்கூடிய முறையில் காரியங்கள் நடப்பதை நாம் அனுமதிக்கக்கூடாது என்பதற்காகத்தான் எங்கள் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பேசக்கூடிய நேரத்தில் பல உண்மைகளைக் கொடுத்து, வெள்ளைக்காரர்களிடமிருந்து தோட்டங்களை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்களே தவிர வெள்ளைக்காரர்கள்மீது இருக்கக்கூடிய வெறும் இன வெறியால் அல்ல. ஜாதி வெறி, இன வெறியைத் தூண்டிவிடவேண்டுமென்ற எண்ணம் நம்முடைய மக்களுக்கு இருந்திருந்தால் 200 வருஷ காலமாக வெள்ளைக்காரர்களுடைய ஆதிக்கத்தில் அடிமைப்பட்டுக்கொண்டிருந்தவர்கள் தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டபோது வெள்ளைக்காரன் யாராவது தனியாகத் தெருவில் நடந்துபோயிருக்க முடியுமா? இன வெறியைத் தூண்டிவிடுவது என்பது தமிழர்களுடைய பண்பு அல்ல. கம்யூனிஸ்டு கட்சிக்கும் அந்த மாதிரி எண்ணம் கிடையாது. இன வெறியைத் தூண்டிவிடக்கூடியவர்கள் யாராயிருந்தாலும் அவர்களைக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுதியாக எதிர்த்துத்தான் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஏன் வெள்ளைக்காரர்களிடமிருந்து தோட்டங்களை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்கிறார்கள் என்பதை நாம் பார்க்கவேண்டும். 'அன்னிய நாட்டிலிருந்து கொண்டுவந்து மூலதனத்தைப்போட்டு வெள்ளைக்காரர்கள் தோட்டங்களை வைத்திருக்கின்றார்கள். ஆகவே, நஷ்ட ஈடு கொடுக்காமல் தோட்டங்களை எடுத்துக்கொள்ள அரசியல் சட்டத்தில் இடம் இல்லையே' என்று சொல்லலாம். அன்னியர் மூலதனம் போட்டு அது நம் நாட்டுத் தொழில் வளர்ச்சிக்கு உதவியாக இருந்தால் அதற்கு நியாயமான வட்டி கிடைக்கவேண்டும். மூலதனம் போட்டு தொழில் நடத்துபவர்களுக்கு வட்டி கிடைக்கக்கூடாது என்பது அல்ல கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் பலர் பலவிதமாகப் பேசியிருக்கிறார்கள். நமக்குத் தேவையான தொழிலை நடத்துவதற்கான இயந்திரங்களைக் கொடுத்து கடனாக மூலதனம் கொடுத்திருந்தால் வட்டியை அனுமதிப்பதில் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஆட்சேபணை கிடையாது."

3-20 p.m.

MR. SPEAKER :—" You can take as much time as you want."

SRI M. NARAYANA KURUP :—" The Hon. Speaker is very liberal."

* SRI M. KALYANASUNDARAM :—" காப்பி, தேயிலைத் தோட்டங்களை நடத்தும் வெள்ளைகார கம்பெனிகளின் பாலன்ஸ் ஷீட்டைப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நூறு வருஷ சரித்திரத்தைநான் புரட்டிக்கொண்டிருக்கப்போவதில்லை. சென்ற 15, 20 வருஷ புள்ளிவிவரங்களை மட்டும் கொடுக்க விரும்புகிறேன். செம்ரா பீக் எஸ்டேட்ஸினுடைய 1953–54-ம் வருஷத்திய பாலன்ஸ் ஷீட் என்னுடைய கையில் இருக்கிறது. இக்கம்பெனியினுடைய மானேஜிங் ஏஜெண்டுகள் பீயர்ஸ், லெஸ்லி கம்பெனியாவார்கள். இந்த கம்பெனிக்கு பல எஸ்டேட்டுகள் இருக்கின்றன. ஒன்றிலிருந்து வந்திருக்கக்கூடிய விவரங்களை சபையினுடைய கவனத்

16th February 1955] [Sri M. Kalyanasundaram]

திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1944-45-க்கு முன்பு இதனுடைய மூலதனம் எவ்வளவு இருந்தது என்று இவர்கள் சொல்லவில்லை. அது ரொம்பவும் குறைவாகத்தான் இருக்குமென்று நினைக்கிறேன். 1944-45-ல் ரூபாய் 4,66,700-க்கு உயர்த்தப்பட்டது என்று புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். 1947-48-ல் மூலதனத்தை ரூபாய் 9,33,400-க்கு உயர்த்தியிருக்கிறார்கள். அதாவது சுமார் 10 லட்சம் ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறார்கள்.

"Issued capital was increased in 1947–48 from Rs. 4,66,700 to Rs. 9,33,400, by the issue of 2,33,350 bonus share of Rs. 2 each என்று இந்த ரிப்போர்ட்டில் கண்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் முதல் போட்டவர்கள் போனஸ் எடுத்துக்கொள்வது என்று சொன்னால் யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்டிருக்கும் லாபத்தை மறைப்பதற்கான ஒரு தந்திரம் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ரூபாயாக யாரும் முதல் போடவில்லை. வரக்கூடிய லாபம் அதிகமாயிருக்கிறது. பங்கு போட்டு 60 சதம் 70 சதத்திற்குமேல் லாபம் வந்துவிட்டால் பகிரங்கமாகத் தெரிந்துவிடபோகிறதே என்று நினைத்து இவர்களுடைய லாப பங்கை குறைத்துக் காட்டுவதற்காக வேண்டி லாபத்தில் ஒரு பகுதியை மூலதனமாக மாற்றி வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆரம்பத்தில் போட்ட மூலதனம் 4,66,700-க்கு மேல் கிடையாது. அதை வைத்துக்கொண்டு தங்களுடைய மூலதனத்தை சுமார் ரூபாய் 10 லட்சமாக உயர்த்திக்கொண்டதோடல்லாமல் 1940-ல் இருந்து 1954 வரையில் இருக்கக்கூடிய 14 வருஷத்தில் இவர்கள் சம்பாதித்த மொத்த லாபம் சுமார் 25 லட்ச ரூபாயாகும். சுமார் 5 லட்ச ரூபாய் மூலதனம் வைத்து ஆரம்பித்தது. இந்த கால கட்டத்தில் 25 லட்சம் ரூபாய் வரையில் லாபம் சம்பாதித்துக் கொடுத்ததையும் பார்க்கவேண்டும். ஆரம்பத்தில் போட்ட மூலதனத்தைவிட 5 மடங்கு லாபம் இந்த கால கட்டத்தில் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் 15 முதல் 40 சத விகிதம் வரையில் டிவிடண்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாவற்றையும் நான் கற்பனையிலிருந்து சொல்லவில்லை. அந்த கம்பெனி வெளியிட்டிருக்கும் புள்ளிவிவரங்களிலிருந்துதான் சொல்லுகிறேன்.

"அடுத்தபடியாக செவ்வாய் மலை எஸ்டேட் என்ற கம்பெனியும் பீயர்ஸ் லெஸ்லியைச் சேர்ந்தது. இதில் 1944–45 போட்ட மூலதனம் ரூபாய் 1,83,390. அது 1952–53-ல் ரூபாய் 3,66,780 ஆக உயர்ந்திருக்கிறது. இதுவும் எப்படி உயர்த்தினார்கள் என்றால் முன் சொன்னதுபோல் லாபத்தை போனசாக மாற்றி உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். 1937–38-ல் இருந்து 1952–53 வரையில் உள்ள 15 வருஷ காலத்தில் மொத்த லாபமாக 50 லட்ச ரூபாய் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பங்குதாரர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய டிவிடன்ட் எவ்வளவு? பங்குதாரர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய மொத்த டிவிடன்டு 223 சதவிகிதம். போட்டதைப்போல $2\frac{1}{4}$ மடங்கு டிவிடன்டு கிடைத்துவிட்டது. தலைக்கு 10 ரூபாய் ஷேராக எடுத்துக்கொண்டார்கள். மூலதனம் போடாமலே பங்கீடு வருஷாவருஷம் வந்துகொண்டே இருக்கிறது.

"ஆக்டர் லோனிவாலி எஸ்டேட் என்ற இன்னொரு கம்பெனி இருக்கிறது. இதை நிர்வகிக்கக்கூடியவர்கள் பீயர்ஸ் லெஸ்லிதான். இவர்களுடைய பாலன்ஸ் ஷீட்டைப் பார்த்தால் ஆரம்பத்திலே போட்டிருக்கக்கூடிய மூலதனம் ரூபாய் 3,23,660 அதற்குப் பிறகு அவர்கள் மூலதனத்தை ரூபாய் 19,45,980-க்கு உயர்த்தியிருக்கிறார்கள். போட்ட மூலதனத்தைவிட கிட்டத்தட்ட 6 மடங்காக மூலதனத்தைப் பெருக்கியிருக்கிறார்கள். இதில் ஒரே ஒரு சமயம்தவிர மற்ற சமயமெல்லாம் மூலதனத்தைப் பெருக்கி இருக்கக்கூடிய முறை போனஸை ஷேராக கொடுத்திருப்பதுதான். லாபத்தை போனஸாக மாற்றி மூலதனத்தோடு சேர்த்துக்கொண்டு மூலதனத்தை 19 லட்சம் ரூபாய்க்கு மேல் உயர்த்தியிருக்கிறார்கள்.

[Sri M. Kalyanasundaram] [16th February 1955

“இவர்கள் அடித்திருக்கும் லாபத்தைப் பார்க்கலாம். 1937-38-ல் இருந்து 1952-53 வரை மொத்த லாபம் அடித்திருக்கக்கூடியது 62 லட்ச ரூபாய். போட்ட மூலதனம் 3,23,660 ரூபாய். ஆரம்பத்தில் போட்ட மூலதனம் எவ்வளவு ? எந்த மாதிரி எவ்வளவு லாபம் அடிக்க முடிகிறது என்பதை நாம் பார்க்கிறோம். 1942–43-ல் 50 சதவிகித டிவிடென்டும் 1950–51-ல் 40 சதவிகிதம். 1945–46-ல் 40 சதவிகிதமும் 1950–51-ல் 40 சதவிகிதமும் டிவிடென்டு அளித்திருக்கிறார்கள். தேயிலைக்கு 1951–52-ல், நெருக்கடி ஏற்பட்ட சமயம் 10 சதவிகிதம் டிவிடென்டு கொடுத்திருக்கிறார்கள். குறைவாக டிவிடன்டு கொடுத்தது கிடையாது. இரண்டு வருஷத்தில் 10 சதவிகிதம் கொடுத்திருக்கிறார்கள். அனேகமாக எல்லா வருஷங்களிலும் 25 சதவிகிதத்திற்கு அதிகமாகவே டிவிடென்டு கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்கவேண்டும்.

“வெள்ளைக்கார நிர்வாகத்தில் இருக்கக்கூடிய கம்பெனிகளைப்பற்றித் தான் நான் இதுவரையிலும் சொன்னேன். இப்பொழுது நம்முடைய இந்தியர்கள் நடத்தக்கூடிய கம்பெனிகள் எப்படியிருக்கிறதென்று பார்க்கலாம். புளு மவுண்டன் எஸ்டேட்டுக்கு 25 லட்ச ரூபாய் மூலதனம் போட்டிருக்கிறார்கள். 1943–44-லிருந்து 1952–53 வரை மொத்த லாபம் சம்பாதித்திருப்பது ரூபாய் 56,18,058. தேய்மான நிதிக்காக ரூபாய் 4,25,000 ஒதுக்கியிருக்கிறார்கள். மேலும் ரிசர்வ் நிதிக்கு ஒதுக்கியிருப்பதையும் பார்த்தால் நாம் திகைக்கவேண்டியிருக்கிறது. ஏதோ பாதாள லோகத்தில் பவுன் குவிந்திருக்கிறதென்று சொல்வதை புராணக்கதையில் கேட்டிருக்கிறோம். அதுபோல தோட்டத்தொழிலை நடத்துகிறவர்கள் மலைச் சாரல்களில் ஒரு தனி லோகத்தையே சிருஷ்டித்து இருக்கிறதாகத்தான் தெரிகிறது. மற்றும் இருக்கக்கூடிய தேயிலை கம்பெனி ஷேர்களுக்கு போடப்பட்ட மூலதனத்தைவிட 2½ முதல் 4 பங்கு வரையில் உயர்ந்திருக்கிறது என்பதையும் நாம் பார்க்கவேண்டும்.

3-30 p.m. “இவ்வளவு மூலதனத்திற்கு அதிகமாக லாபம் சம்பாதித்தும் கூட போட்ட வருமானத்தை அவர்கள் எடுத்துக்கொண்டு விட்டார்கள். இப்பொழுது அந்தத் தோட்டங்களின் மதிப்பை எடுத்துக்கொண்டாலும் அவைகளின் மதிப்பு குறையவே இல்லை. அப்படியேதான் இருக்கிறது. எந்தத் தோட்டப் பொருள்களும் வருஷா வருஷம் பலன் கொடுத்துக்கொண்டே தானிருக்கிறது. பார்க்கப்போனால் அதிகமாகவேதான் கொடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இதிலிருந்து பார்க்கவேண்டும். அந்தக்காலத்தில் வேண்டுமென்ற லாபம் கொடுத்துக்கொண்டு வந்தது, இப்பொழுது அப்படி இருக்குமா என்று கேட்கலாம். இந்தத் தேயிலை சம்பந்தப்பட்ட மட்டில் நாம் நிச்சயமாக அப்படிக் கொடுத்துக்கொண்டிருக்கும் என்று நம்பலாம். எந்தக் காலத்திலும் நெருக்கடியே வராது. இது அவர்களுக்கு நல்ல வியாபாரமாகி லாபம் கிடைக்கக்கூடியது. உலகத்தில் உற்பத்தியாகும் தேயிலையில் 40 பர்சென்ட் தேயிலையை நாம் உற்பத்தி பண்ணுகிறோம். நம்முடைய ராஜ்யம் பூராவும் எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட அதில் பாதி தேயிலை நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தியாகிறது. இந்தியாவில் தேயிலை இல்லாமல் மேற்கத்திய நாடுகள் இருக்கமுடியாது. தேயிலையை உபயோகிப்பது என்பது உலகம் பூராவும் அதிகரித்து வருகிறது. அதற்கு எப்பொழுதும் அதிகப்படியான கிராக்கி இருக்கும். பிரிட்டனில்கூட தேயிலையின் விலை அதிகரித்துக்கொண்டு வருகிறது. அதனுடைய உபயோகமும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. அங்கு கிளர்ச்சி அதிகரித்துக்கொண்டு வருவதால் அங்கு அதிகப்படியாக விலையாகாது என்றபயம் இல்லை. தேயிலைத் தொழில் செழிப்பாக நடக்கும் தொழில் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

“இந்தத் தேயிலைத் தொழிலை வெள்ளைக்காரர்கள்தான் அபிவிருத்தி செய்தார்கள். வேறு தொழிலை அவர்கள் அபிவிருத்தி செய்யவில்லை. ‘வெள்ளைக்காரர்கள் நன்றி கெட்டவர்கள் என்றெல்லாம் நாங்கள் திட்டுகிறோம்’ என்று எங்கள்மீது குற்றம் சாட்டினார்கள். நாங்கள் அப்படிதிட்டவில்லை. அவர்கள் நன்றி கெட்டவர்கள் என்றும் நாங்கள்

16th February 1955] [Sri M. Kalyanasundaram]

சொல்லவில்லை. தேயிலைத் தொழிலை மட்டும் வளர்த்து அபிவிருத்தி செய்தார்கள் என்றுதான் சொன்னோம். மிகச் சிறந்த காபித் தொழிலை மட்டும் அவர்கள் வளர்க்கவில்லை. காபியை எடுத்துக்கொண்டால் 80 பர்சென்டுக்கு மேற்பட்ட நிலங்கள் இந்தியர்கள் கையிலிருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். தேயிலைதான் அதிக லாபம் கொடுக்கக்கூடியது. காபி அதிக லாபம் கொடுக்கக்கூடியதல்ல. அதனால்தான் வெள்ளையர்கள் காபி பக்கம் போவதில்லை. காபி பயிரிடுவதில் ஆபத்தும் இருக்கிறது. தேயிலையில் அவ்வளவு ஆபத்து இல்லை. இந்தியத் தேயிலைக்கு ஏகபோக உரிமை இருப்பதால் அதை வைத்துக்கொண்டு அவர்கள் உலகம் பூராவும் வியாபாரம் பண்ணலாம் என்று அதை வளர்த்து அபிவிருத்தி செய்தார்கள். இந்த தேயிலை பிரிட்டனுக்கு ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. இந்தியா முதற்கொண்டு உலக நாடுகள் அவர்கள் கையிலிருக்கும்போது இதை உற்பத்தி செய்து இங்கு குறைந்த விலைக்கு உற்பத்தி செய்து வாங்கி வெளி நாடுகளில் அதிக விலைக்கு விற்று வந்தார்கள். அதனால் அவர்கள் இரண்டு பக்கத்திலும் லாபம் அடைந்து வந்தார்கள். இவ்விதம் இரண்டு பக்கங்களிலும் ஏற்பட்ட லாபத்தின் காரணமாகத்தான் அவர்கள் இந்தத் தேயிலைத் தோட்டங்களை வளர்ப்பதற்கு அதிக கவனம் செலுத்தி வந்தார்கள் என்பதைப் பார்க்கவேண்டும்.

" இனி என்ன செய்யலாம். இதற்கு வரி போடுவதை யாராகிலும் ஆட்சேபிக்கலாம். தோட்டக்காரர்களுக்கு கஷ்டங்கள் இருக்கலாம் என்று சொல்லி இந்தத் தொழில் பூராவையும் பறிக்கக்கூடாது. இந்தியத் தோட்டக்காரர்களுக்கு சில கஷ்டங்கள் இருக்கின்றன என்பது உண்மை. எல்லோரும் லாபம் சம்பாதிக்கிறார்கள் என்று சொல்வதற்கும் இல்லை. வெள்ளைக்கார தோட்டக்காரர்களுக்கு இருக்கும் வசதிகளைப்போல் இந்திய தோட்டக்காரர்களுக்கு இல்லை. அதிக கஷ்டம் இருக்கிறது. அந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்கு பதில் அந்தத் தோட்டப் பொருள்களுக்கு வரி போடுவதை ஆட்சேபிப்பது சரியாகாது என்பதைப் பார்க்கவேண்டும்.

" இந்தியத் தோட்டக்காரர்கள் சிறிய தோட்டக்காரர்களாக இருப்பதோடு ஏற்றுமதி செய்வதற்கு வெள்ளைக்காரர்களுக்கு இருக்கும் வசதிகளைப்போல் இவர்களுக்குக் கிடையாது. இவர்களுக்கு கொஞ்சம் தான் ஏற்றுமதி இருக்கிறது. வெள்ளைக்கார கம்பெனிகளுக்கு இருக்கும் வசதி இவர்களுக்குக் கிடையாது.

" பியர்ஸ் லெஸ்லி கம்பெனி இந்தியாவிலும் இதைச் சேர்ந்த பிரிட்டனில் இருக்கக்கூடிய அதே கம்பெனி அங்கு வியாபாரம் செய்யும் கம்பெனி, இந்த இரண்டு கம்பெனிகளும் சேர்ந்து இருந்துகொண்டு இங்கே ஒரு பவுண்ட் தேயிலையை மூன்று ரூபாய்க்கு வாங்கி அங்கு பிரிட்டனில் அதே ஒரு பவுண்ட் தேயிலையை $5\frac{1}{4}$, $5\frac{1}{2}$ ரூபாய்க்கு விற்று இரண்டு விதங்களில் லாபமடைந்து வருகிறார்கள். ஆனால் நாம் இங்கு அந்த அதிகப்படியான $2\frac{1}{2}$ ரூபாய்க்கு வருமான வரி போட முடியாது. பிரிட்டனில் ஒரு விதமாக வரி இருக்கும். அந்த வரியைத்தான் அவர்கள் கொடுக்கிறார்கள். அதனால் அந்நியர்கள் கையில் இருக்கும் தோட்டங்களை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். அந்தத் தோட்டங்கள் அந்நியர்கள் கையிலிருப்பதால் அதனால் நம்முடைய ராஜ்யத்திற்கும் பிரயோசனமில்லை. பிரிட்டனுக்கும் பிரயோசனமில்லை. மக்களுக்கும் பிரயோசனம் இல்லை. அதற்கு பதிலாக வரும் லாபமெல்லாம் வெள்ளைக்காரர்களுடைய கைக்குப் போகிறது. அபிவிருத்தி வரி போடக்கூடிய காலத்தில் அந்த வரியை இந்த அரசாங்கம் போடுவதற்கு ஏன் ஆட்சேபிக்கிறார்கள். அபிவிருத்தி வரி போடுவதென்றால் யார் கையில் மிச்சம் இருக்கிறதோ அதை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். யார் கையில் மிச்சம் இருக்கும். ஏழை விவசாயிகளுடைய கையில் 5, 10 என்று மிச்சமிருப்பதைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த தேயிலைத் தொழிலில் யார் கையில் மிச்சம்

[Sri M. Kalyanasundaram] [16th February 1955

இருக்கிறது. அந்த மிச்சத்தை ஏன் உபயோகப்படுத்தக்கூடாது என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அவர்களுடைய கையில் என்ன மிச்சம் இருக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும்.

"உதாரணமாக கிட்டத்தட்ட 50 கோடி பவுண்ட் தேயிலே இந்தியா விலிருந்து பிரிட்டனுக்கு ஒரு சில பகுதியும், அமெரிக்காவுக்கு ஒரு சில பகுதியும், சோவியத் ரஷ்யாவிற்கும் சைனுவிற்கும் ஒரு சிறு பகுதியும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. பெரும் பகுதி எங்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது என்பதைப் பார்க்கவேண்டும். பிரிட்டனுக்குத்தான் பெரும் பகுதி ஏற்றுமதி செய்யப்படுகிறது. 63 கோடி பவுண்ட் தேயிலே ஒவ் வொரு வருஷமும் வெளி நாட்டிற்கு ஏற்றுமதியாகிறது. 1954-ம் வரு ஷத்தில் 63 கோடி பவுண்ட் உற்பத்தியாகி கிட்டத்தட்ட 50 கோடி பவுண்ட் பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது பிரிட்ட னில் விலே அதிகரித்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இங்கு ஒரு பவுண்ட் ரூ. 3-க்கு வாங்கிய தேயிலேயை பிரிட்டனில் போய் விற்கும் காலத்தில் அது ரூ. $5\frac{1}{2}$ யாகிறது. கப்பலில் போகும்போது ஒரு பவுண் டுக்கு $2\frac{1}{2}$ ரூபாய் அதிகமாகிறது. நாம் போடக்கூடிய வரியை எடுத்துக் கொண்டால் அதன்மீது ரூ. 3க்குத்தான் வரி போடுகிறோம். அந்த மூன்று ரூபாய்க்குத்தான் நாம் வருமான வரி போடலாம். மேற் கொண்ட $2\frac{1}{2}$ ரூபாய்க்கு நம் தேசத்தின் கணக்கில் வராது. ஆனல் வெள்ளேக்காரர்களேப்போல் தமிழ்க்காரர்கள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய முடியாது. ஏனென்ருல் கப்பல் வேண்டுமென்ருல் அது அவர்கள் கையில்தானிருக்கிறது. எல்லா ஏற்றுமதி வசதிகளும் வெள்ளேக்காரர் கள் கையில்தானிருக்கிறது. ப்ருக் பாண்ட் கம்பெனி, லெஸ்லி கம்பெனி களின் தேவையைத்தான் இந்தியர்கள் நாடவேண்டியதாக இருக்கிறது. அவர்களே நம்பித்தான் இவர்கள் ஏற்றுமதி செய்யவேண்டும். இந் தியர்களுடைய தேயிலே பூராவையும் கொச்சி, கல்கத்தா துறைமுகத்தி லிருந்து வெளி நாட்டிற்கு அனுப்பவேண்டுமானுலும் வெள்ளேக்கார கம்பெனியைத்தான் எதிர்பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அவர் களுடைய காலில் உட்கார்ந்துகொண்டு கெஞ்ச வேண்டியதாக இருக் கிறது. உண்மையில் பார்க்கப்போனுலும் சுமார் 50 கோடி பவுண்ட் தேயிலேயின்மீது நாம் வரி போடுவது கிடையாது. கிட்டத்தட்ட நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள தேயிலேக்குள்ள வரி இந்தியா அரசாங்கத் திற்கும் சென்னே அரசாங்கத்திற்கும் சேராமல் வருஷா வருஷம் பிரிட் டனுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் யாருடைய மிச்சத்தை எடுக்கவேண்டும் என்பதைப் பார்க்கவேண்டும். 5, 10 என்று மிச்சம் வைத்துக்கொண்டிருக்கும் விவசாயிகளுடைய மிச்சத்தை எடுப் பதா அல்லது இவர்களுடைய மிச்சத்தை எடுப்பதா என்பதைப் பார்க்க வேண்டும். விவசாயத்திற்கு கால்வாயை வெட்டிக் கொடுத்தால், குளத் தை வெட்டிக்கொடுத்தால், அதற்கு அபிவிருத்தி வரி போடுவதா அல் லது இவர்களுடைய மிச்சத்தை எடுத்துக்கொள்வதா என்பதைப் பார்க்க வேண்டும். இவர்களுடைய நூறு கோடி ரூபாய் மிச்சத்தை எடுக்கட் டும், அதற்கு எல்லோரும் ஆதரவு கொடுக்கிறோம். எங்களுக்கு வெள் ளேக்காரர்களின்மேல் வெறி இல்லே. எங்களுக்கு ஜாதி வெறி இல்லே. நாங்கள் ஜாதி வெறியைத் தூண்டி விடவுமில்லே. இதைச் சொன்னுல் எப்படி ஜாதி வெறியைத் தூண்டிவிட்டதாகும். இப்பொழுது இருக்கும் வரியினுல் பிரிட்டிஷ் மக்களுக்கும் நன்மை இல்லே, நம்முடைய மக்க ளுக்கும் நன்மை இல்லே. இந்த வரியினுல் பிரிட்டனில் விலேயை ஏற்ற லாம். இந்தியா அரசாங்கம் வரி போட்டுவிட்டது. அதனுல்தான் நாங்கள் விலேயை ஏற்றுகிறோம் என்று கம்பெனிக்காரர்கள் சொல்லலாம். அத னுல் அங்கு கிளர்ச்சி ஏற்படலாம். அப்படியே இப்பொழுது ஜனங்களே
3-40 p.m. கிளர்ச்சி செய்யும்படி முதலாளிகள் தூண்டிக்கொண்டிருக்கிருர்கள். பிரிட்டிஷ் மக்களுக்கு நன்மையல்ல. இந்திய மக்களுக்கும் நன்மை யல்ல. அவர்கள் இந்திய அரசாங்கத்தின்மீது பிரிட்டிஷ் மக்களிடத்தில் தவருன எண்ணம் ஏற்படவேண்டும் என்பதற்காக முதலாளிகளே கிளர்ச் சியைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிருர்கள். 'தேயிலேக்கு இந்தியா வில் அளவுக்கு மிஞ்சி ஏற்றுமதி வரி போட்டுவிட்டார்கள். ஆகவே,

நாங்களும் தேயிலையின் விலையை உயர்த்திவிட்டோம்' என்று சொல்லி இந்திய சர்க்கார் போட்டிருக்கக்கூடிய ஏற்றுமதி வரியை சுட்டிக்காட்டுகிறார்கள். ஏற்கெனவே ஏற்றுமதி வரி ஆறு அணாவாகத்தான் இருந்தது. இப்பொழுது நாலணா அதிகமாக்கி பத்தணா என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு எதிராக பிரிட்டனில் அவர்கள் கிளர்ச்சியைத் தூண்டிக்கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் மக்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டியதென்னவென்றால், 'பிரிட்டிஷ் முதலாளிகளுடைய கையில் ஏற்றுமதி வியாபாரம் இருப்பதால்தான் பிரிட்டிஷ் மக்கள் தேயிலைக்கு அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது, இந்தியத் தேயிலை தோட்டக்காரர்களுக்கும் நியாயமான விலை கிடைக்கவில்லை' என்பதை பிரிட்டிஷ் மக்களுக்கு உணர்த்தவேண்டியிருக்கிறது."

* **Sri K. PARTHASARATHY :—"Sir, recently there was an announcement in the British Parliament that the increase in price was not due to the export duty but due to other causes."**

* **Sri M. KALYANASUNDARAM** :—"வாஸ்தவம். ஆனால், பிரிட்டிஷ் முதலாளிகள் இந்திய சர்க்காரைப் பற்றி பிரிட்டனில் எந்தவிதமான பிரசாரத்தைச் செய்துகொண்டு வருகிறார்கள் என்பதையெல்லாம் கனம் அங்கத்தினர் பத்திரிகையிலிருந்து தெரிந்திருக்கவேண்டும். இந்திய சர்க்கார் பவுண்டு ஒன்றுக்குப் பத்தணாதான் ஏற்றுமதி வரி போட்டிருக்கிறார்கள். ஆனால், இலங்கை சர்க்கார் ரூ. 1 ஏற்றுமதி வரி போட்டிருக்கிறார்கள். இப்படி ஏற்றுமதி வரி போடுவதினால் விலை உயரவேண்டிய அவசியம் இல்லை. தேயிலைத்தோட்ட முதலாளிகளுக்கு ரூ. 2-4-0 வரையில் லாபம் கிடைக்கும்போது இந்திய சர்க்கார் ஏற்கெனவே விதித்துவந்த ஆறணாவோடு இப்பொழுது ஒரு நாலணா உயர்த்தியிருப்பதை அவர்கள் கொடுத்துவிட்டால் அவர்களுக்கு எந்தவிதமான நஷ்டமும் வந்துவிடாது. வெள்ளைக்காரர்களுடைய கையில் ஏற்றுமதி வியாபாரம் இருக்கக்கூடாது. அவசியமானால் சர்க்காரே அந்த உரிமையை வாங்கிக்கொள்ளவேண்டும்.

"ரெவினியூ மந்திரி அவர்கள் விவாதத்திற்குக் கடைசியில் பதில் சொல்லக்கூடிய காலத்தில், 'இந்த யோசனைகளெல்லாம் பார்லிமென்டில் உங்களுடைய தோழர்களைக்கொண்டு எடுத்துச் சொன்னால் பிரயோசனம் ஏற்படுமே, என்னிடம் சொல்வதில் என்னபபிரயோசனம்"? என்று அவர் சொல்லக்கூடும். அம்மாதிரியான பதிலை அவரிடமிருந்து நான் இன்று எதிர்பார்க்கவில்லை. அப்படி அவர் சொல்வாரானால், அது வழக்கமாக சொல்லக்கூடிய பதிலாகத்தான் போய்விடும் என்று அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"தேயிலைத் தோட்டங்களை அப்படியே சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டாம். நிர்வாகத்தை நடத்துவதற்கு சர்க்காரால் முடியாமலிருக்கலாம். நம்முடைய ராஜ்யத்தில் விளையக்கூடிய தேயிலையை நாம் கொள்முதல் செய்து, விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். மாகாண சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் இத்தகைய உரிமை அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், இது 'கன்கரண்ட் லிஸ்ட்' டில் இருக்கிறது. இவ்வரியின் மூலமாக கிடைக்கப்போகும் ஒரு கோடி ரூபாய்க்கு மாகாண சர்க்கார் ஏன் கெஞ்சிக்கொண்டிருக்கவேண்டும்? நம்முடைய ராஜ்யத்தில் விளையக்கூடிய மலைத்தோட்ட விளைபொருள்களை சர்க்கார் கொள்முதல் செய்து வினியோகிப்பதன்மூலம் தோட்டப்பொருள்களிலிருந்து மட்டும் வருஷமொன்றுக்கு ஐந்து கோடி ரூபாய்க்குமேல் நம்முடைய ராஜ்யத்திற்கு பங்கு கட்டாயம் கிடைக்கும். மத்திய சர்க்காரைக்கூட கெஞ்சிக்கொண்டிருக்கவேண்டாம். ஏற்றுமதி வரியில் ஒரு பகுதியை நாம் மத்திய சர்க்காரிடமிருந்து கேட்கலாம் 'எங்கள் ராஜ்யத்திலிருந்து கிட்டத்தட்ட ஆறு கோடி பவுண்டு வரையில் தேயிலை ஏற்றுமதியாகும்போது அதற்குத் தகுந்த அளவு ஏற்றுமதி வரி மத்திய சர்க்காருக்குக் கிடைக்கும்போது ராஜ்ய சர்க்காருக்கு ஒரு பங்கு கொடுங்கள்' என்று நாம் கேட்கலாம். அப்படிக் கேட்பதற்கு அரசியல் சட்டத்தில் இடமில்லை என்று சொல்லலாம்.

அரசியல் சட்டம் மக்கள் இயற்றியது. ஆகையால், மக்கள் அதைத் தேவையானுல் திருத்திக்கொள்வதற்கு உரிமை இருக்கிறது. அது கஷ்டமான விஷயமல்ல. தேயிலேயை நாமே கொள்முதல் பண்ணி விற்பது என்ற நிலைமை ஏற்பட்டால்தான் தேயிலேத் தோட்டங்களிலிருந்து வெள்ளேக்காரர்களுடைய ஆதிக்கம் போக முடியும். அப்பொழுதுதான் நம் நாட்டில் உற்பத்தியாகக்கூடிய தேயிலேக்கு நியாயமான விலே கிடைக்கும்; பிரிட்டனில்கூட அவர்களுக்கும் நியாயமான விலேக்குத் தேயிலே கிடைக்க முடியும் என்ற உண்மையைப் பார்க்கவேண்டும். இதைப்பார்த்தால், தேயிலேத் தோட்டங்களே சர்க்காரே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கை வெள்ளேக்காரரின்மேல் ஏற்படும். இனவெறியால் ஏற்பட்டது அல்ல; நம்முடைய தேசத்தின் சொத்து நம் நாட்டினுள்ளவர்களுக்குப் பயன்படவேண்டும், அந்தச் சொத்திலிருந்து வரக்கூடிய லாபம் நம் தேசத்தின் வளர்ச்சிக்காக உபயோகப்படவேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லப்பட்டதாகும். நம் நாட்டின் சொத்து அன்னியர்களின் கையில் இருக்கக்கூடாது என்று சொல்வதை யார்தான் ஆட்சேபிக்கமுடியும்† எந்த தேசத்திலாவது இப்படிப்பட்ட நிலே இருக்கமுடியுமா? பிரிட்டன் போன்ற தேசங்களில் இரும்பு, நிலக்கரித் தொழிற்சாலேகள் இருக்கின்றன. அவைகளிலிருந்து உற்பத்தியாவதை நம்மவர்கள் இங்கு தூக்கிக் கொண்டுவரமுடியுமா? தூக்கிக்கொண்டு வரத்தான் அவர்கள் அனுமதிப்பார்களா? பிரிட்டனுக்குத் தேயிலே தேவையாக இருக்கிறதென்று வெள்ளேக்கார முதலாளிகள் அங்கு தூக்கிக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறுர்கள். மூலதனம் போடாமலேயே ஆரம்பித்த தேயிலேத் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் தேயிலேயை பிரிட்டனுக்கு எடுத்துக் கொண்டு போகாதே என்று நாம் சொன்னுல் அதை 'expropriation' என்று சொல்லமுடியுமா? முடியாது. இதை 'expropriation' என்று சொன்னுல், அப்பொழுது அந்த வார்த்தைக்கே அர்த்தமில்லாமல் போய்விடும். இந்த சந்தர்ப்பத்தில் அவ்வார்த்தையை உபயோகித்தால் அது துஷ்பிரயோகம் செய்வதாகும். நம் நாட்டுச் செல்வத்தை, நம் அனுமதியில்லாமல், நாம் தூங்கிக்கொண்டிருக்கும்போது கொள்ளேயடித்துக்கொண்டு போகிறுர்கள். அந்தக் கொள்ளேயை நிறுத்தவேண்டுமென்று நாம் சொன்னுல், வெள்ளேக்காரர்கள் மூலதனம் போட்டு அபிவிருத்தி செய்ததை அவர்களிடமிருந்து நாம் எடுத்துக்கொண்டுவிடவேண்டுமென்று நாங்கள் சொல்வதாக ஒரு சிலர் சொல்வதானது உண்மையைத் தெரிந்துகொள்ளாமல் செய்யக்கூடிய குற்றச்சாட்டு என்றுதான் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

" சபாநாயகர் அவர்களே, வெள்ளேக்காரர்களுடைய ஆதிக்கத்திலிருக்கும் தேயிலேத் தோட்டங்களிலிருந்து அவர்கள் அடிக்கும் கொள்ளே லாபத்தைப் பற்றி நான் இதுவரை எடுத்துக் காண்பித்தேன். இதிலிருந்து நாம் போடக்கூடிய வரியையும் ஒப்பிடடுப் பாருங்கள். பழைய கணக்குப்படி கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் இவ்வரியின் மூலம் 10 முதல் 12 லட்சம் வரையில் கிடைக்குமென்று சொன்னுர்கள். அவர் ரொம்பக் குறைவாக மதிப்பிட்டிருக்கிறுர் என்று நான் நினேக்கிறேன். இப்பொழுது போட்டிருக்கக்கூடிய விகிதாசாரப்படிக்கூட ஏதோ ஒன்றரை கோடி ரூபாய் கிடைக்குமென்று நினேக்கிறேன். எனக்கு கிடைத்திருக்கக்கூடிய ஒரு சில புள்ளி விவரங்களிலிருந்து, எனக்கு தெரிந்தவரை உத்தேசமாகக் கணக்குப் போட்டுப் பார்த்தால் சுமார் ஒன்றரை கோடி ரூபாய் கிடைக்குமென்று நான் நினேக்கிறேன். இது ஏறத்தாழ சரியாகவே இருக்குமென்று நான் நினேக்கிறேன். (இச்சமயத்தில் கனம் ரெவினியூ மந்திரி குறுக்கிட்டார்.) கனம் ரெவினியூ மந்திரி இவ்வரியின் மூலமாக சர்க்காருக்கு 75 லட்சம் ரூபாய்தான் வரும் என்று சொல்லுகிறுர். இதைப்பார்க்கும்போது யானேயை எறும்பு கடிக்கிற மாதிரி இவ்வரி மலேத்தோட்ட முதலாளிகளுக்குப் போடப்படுகிறது என்று நான் முதலில் குறிப்பிட்டது தவறல்ல என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றுல் வருஷமொன்றுக்கு சில முதலாளிகள் 100 கோடி ரூபாய் வரையில் கணக்கில் சிக்காமல் சம்பாதித்துக்கொண்டிருக்கும்போது, நம் ராஜ்ய சர்க்காருக்கு இவ்வரியின் மூலம் 75 லட்சம் ரூபாய்தான் வரப்போகிறது. தோட்ட

16th February 1955] [Sri M. Kalyanasundram]

முதலாளிகளுக்கு இந்த வரி ஒரு பொருட்டல்ல. ஏராளமான லாபம் அடைபவர்களுக்கு வரி போடவேண்டுமென்று நாங்கள் கிளர்ச்சி பண்ணிக் கொண்டிருக்கிறோம் என்பதற்காக எங்களைத் திருப்தி செய்வதற்காகவும் அந்தத் தோட்டக்காரர்கள் மீது இவ்வரி போடப்பட்டிருப்பதாகத்தான் தெரிகிறது. அந்தத் தோட்டக்காரர்களை தாஜா பண்ணுவது மாதிரி, 'உங்களுக்கு வரி அதிகமாகப் போடப்போவதில்லை, கம்யூனிஸ்டுகள் ஏதோ கலாட்டா பண்ணுகிறார்கள் என்பதற்காக நாங்கள் உங்கள் மீது சிறிது வரி போடுகிறோம்' என்று சொல்வதுபோல இம்மசோதா அமைந்திருக்கிறது. எங்களை அவர்கள் திட்டினாலும் பரவாயில்லை, ஆனால் பெரிய தோட்ட முதலாளிகளுக்கு வருமானத்திற்குத் தகுந்தபடி அதிகமான வரி போடவேண்டும். "வெள்ளைக்காரத் தோட்ட முதலாளிகளுக்குப் போடப்பட்டிருக்கும் வரி போதாது என்று கம்யூனிஸ்டுகள் சொல்லுகிறார்கள். வரி விகிதத்தை உயர்த்தவேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சியினர் கலாட்டா பண்ணுகிறார்கள்,' என்று சொல்லி அவர்களுக்கு வரி விகிதத்தை சர்க்கார் உயர்த்தட்டும். அதற்காக வேண்டுமானால் எங்களை அவர்கள் திட்டிக் கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. நம் நாட்டின் செல்வத்தைப் பாதுகாப்பதற்கு எங்களைத் திட்டுவது பிரயோஜனப்படுமானால் எங்களுக்கு அதைப் பற்றி ஆட்டேபணையே கிடையாது. ஏனென்றால், இப்பொழுது தோட்ட முதலாளிகளுக்குப் போடப்பட்டிருக்கும் வரியானது மிக சொல்பம்.

"நம் நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பணம் அதிகமாக தேவைப்படுகிறது. ஆகவே, தேயிலைத் தோட்டங்களை எடுத்துக்கொள்வது அவசியம் என்று மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யவேண்டும். நம் ராஜ்யப் பொருளாதாரத்தில் மிக முக்கியமான பகுதி தேயிலைத் தோட்டங்கள். இந்தத் தொழில் நம் கையில் இருக்குமானால் நம் சர்க்காருக்கு எத்தனை கோடி ரூபாய் வரும் என்று நாம் கவனிக்கவேண்டும். வரி கொடுக்கச் சக்தி இருக்கிறவர்கள் மீதும், பணம் மிச்சம் இருக்கும் இடத்திலும்தான் வரி போடவேண்டுமேயொழிய ஏழை ஜனங்கள்மீது வரி போடுவதினால் மக்களிடையே அதிருப்தியும் நாட்டில் குழப்பமும்தான் ஏற்படும். அத்தகைய நிலைமையை உண்டாக்க வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

"சிறிய தோட்டக்காரர்களுக்கு விதி விலக்கு கொடுத்திருக்கும் அளவு மிகக் குறைவு என்பது என்னுடைய அபிப்பிராயம். அதை அதிகப்படுத்தவேண்டும். ஷரத்துகள் விவாதத்திற்கு வரும்போது அதைப் பற்றி எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நானும் சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன்.

"சர்க்காருக்கு வேறு சில யோசனைகளையும் எடுத்துச் சொல்வதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். சிறிய தோட்டக்காரர்கள் பெரிய கம்பெனிகளை நம்பியிருப்பதிலிருந்து விடுதலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்தபட்சம் முன்னூறு ஏக்கர் தேயிலைத் தோட்டங்கள் வைத்திருந்தால்தான் தேயிலைப் பக்குவம் பண்ணுவதற்கு முடியும். ஆனால், 10 முதல் 20 ஏக்கர் வரையில்—100 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள்கூட சொந்தமாக மூன்று லட்சம் ரூபாய் போட்டு இயந்திரங்களை வைத்து தேயிலை தயார் பண்ணுவது சாத்தியமல்ல. சின்ன தேயிலைத் தோட்டக்காரர்களெல்லோரும் தங்களுடைய தேயிலையைப் பச்சையாகப் பறித்து பெரிய முதலாளிகளிடத்தில் கொடுத்துவிடுகிறார்கள். அதன் பிறகு பெரிய முதலாளிகள் அதைத் தரம் வாரியாகப் பிரித்து உயர்ந்த ரகத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு மட்ட ரகத்தை இந்நாட்டில் விநியோகம் செய்கிறார்கள். அதனால்தான் இங்கெல்லாம் மட்ட ரகத் தேயிலையே பெரும்பாலும் கிடைத்துவருகிறது. இந்நிலையிலிருந்து நம் நாட்டைக் காப்பாற்றவேண்டுமானால் நம்முடைய சர்க்காரே ஒரு அளவுக்குப் பணம் செலவு செய்து சில தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டும். சிறு தொழில்களுக்கு வேண்டிய சில தொழிற்சாலைகளை குறிப்பிட்ட பகுதிகளில் ஆரம்பித்து அந்த தேயிலையைச் சர்க்காரே வாங்கிக்கொண்டு அதை சுத்தப்படுத்தி விற்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். பெரிய பெரிய வெள்ளைக்காரத் தோட்ட முதலாளிகளுக்குப் போட்டியாக தொழிற்

சாலைகளை ஆரம்பிக்கவேண்டுமென்று நான் சர்க்காருக்கு யோசனை கூற விரும்புகிறேன். அப்பொழுதுதான் சிறிய தோட்டக்காரர்களுக்கு உண்மையாகவே ஒரு பாதுகாப்பு ஏற்படும். பத்து ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளித்திருப்பது போதாது. இதனால் தொழிலை அபிவிருத்தி பண்ணுவதற்கு வசதி இருக்காது என்பதையும் நான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"தேயிலைத் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு எவ்வளவோ வசதி தேவையாக இருக்கிறது. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுப்பதற்கும், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையை நிறுவுவதற்கும், இன்னும் நம்முடைய நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும், மக்கள் வறுமையினால் வாடிப் பட்டினி கிடப்பதிலிருந்து தவிர்ப்பதற்கும் நமக்குப் பணம் தேவையாக இருக்கிறது. அப்படிப் பணம் தேவையிருப்பதனால் தேயிலைத் தோட்டங்களிலிருந்து சர்க்காருக்கு இன்னும் அதிகமாகப் பணம் வரக்கூடிய முறையில் சர்க்கார் கவனம் செலுத்தினால் இந்நாட்டில் பல தொழில்கள் பெருகுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படும் என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

3-50 p.m. "அத்தகைய தோட்டங்களுக்கு லாயக்கான நிலம் 195,000 ஏக்கரில் 83 ஆயிரம் ஏக்கர்தான் சாகுபடி செய்யப்படுகிறது. ஏராளமான பூமி இருக்கிறது. அந்த பூமியை அபிவிருத்தி செய்து தோட்டத்தை அபிவிருத்தி பண்ணுவதற்கு எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. நமக்கு இருக்கக்கூடிய கோட்டாவையே ஏற்றுமதி செய்ய முடியவில்லை. குறைவாகத்தான் வெளி நாட்டுக்குத் தேயிலையை நாம் ஏற்றுமதி செய்கிறோம். வெளி நாடுகளில் தேயிலை தேவைப்படுகிறது. ஆகவே தேயிலைத் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதனால் நம் நாட்டிலுள்ள வேலையில்லா திண்டாட்டப் பிரச்னையை போக்குவதோடு சர்க்காருடைய வருமானத்தையும் பெருக்கமுடியும். சர்க்கார் இது விஷயத்தில் கவனம் செலுத்தி முக்கியமான அபிவிருத்தி திட்டமாய் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"அபிவிருத்தி செய்தால் மட்டும் போதாது. வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் விஷயத்திலும் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும். தேயிலை ஏற்றுமதி செய்வதில் இருக்கக்கூடிய கஷ்டங்களை நான் எடுத்துச்சொன்னேன். மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்கு இதைப்பற்றி தெரியப்படுத்தி மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

"நம்முடைய தேசத்தில் உற்பத்தியாகும் விளைபொருள்களை பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஒரு பெரிய ஆபத்தாக இருப்பது வெள்ளைக்காரர்களிடத்திலே இந்த ஏற்றுமதி வசதிகள் இருப்பதுதான். கடலை எண்ணெ ஏற்றுமதி செய்வதுபற்றி இரண்டு தினங்களுக்கு முன்பு ஒரு கேள்வி கேட்கப்பட்டது. வியாபாரிகள் 10 டன் அல்லது 50 டன் ஏற்றுமதி செய்வதற்கு கோட்டா கிடைத்தாலும், வியாபாரிகள் பொருளை வாங்கி ஏற்றுமதி செய்வது கிடையாது. ஏதோ ஏற்றுமதிக்கான லைசென்ஸ் பெற்றுவிடுகிறார்கள். ஆனால் சரக்குகளை வாங்குவது இவர்களல்ல. லைசென்சை பெற்று ராலி கம்பெனி, ஈஸ்ட் ஏசியாடிக் கம்பெனி, லூயி டிரைபஸ் போன்ற பெரிய கம்பெனிகளிடம் கொடுத்துவிடுகிறார்கள். லைசென்ஸைத்தான் வியாபாரம் பண்ணுகிறார்களேயொழிய லைசென்ஸ் வாங்கினவர்கள் பொருளை வாங்கி ஏற்றுமதி செய்வதில்லை. சிறிய தோட்ட விவசாயிகளும் நாட்டிலுள்ள பெரும்பாலான விவசாயிகள் கடனாலும் வறுமையினாலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதைப் போலவே இவர்களுடைய கதியும் இருக்கிறது. வெளிநாட்டு ஏற்றுமதி வியாபாரத்திலும் சர்க்கார் சரியானபடி கவனம் செலுத்தி அதில் ஒரு பரிகாரம் காண்பதற்கு மத்திய சர்க்காருக்கு தெரிவிக்க முன்வரவேண்டும் என்பதையும் இந்தச் சமயத்தில் நான் கூறிக்கொண்டு, இம்மசோதாவில் ஒவ்வொரு பிரிவையும் நாம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும்போது என்னுடைய மற்ற யோசனைகளை தெரிவிக்கலாம் என்ற எண்ணத்துடன் இத்துடன் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்."

16th February 1955] [Sri M. A. Manickavelu]

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Mr. Speaker, Sir, I am glad that ample scope was given to hon. Members to speak freely on the subject. In fact, such ample scope was given that the time by which I should have taken part in this discussion was advanced at least by half-an-hour, because of dearth of speakers. So it cannot be said that we hustled through as far as the general discussion is concerned. I am also glad that this Bill was unanimously welcomed. It is good that at least in this respect there has been so much of unanimity. Even the hon. Member from Chettinad welcomed this. But he liked that the basis of this tax should be different. He wanted that the levy should be on the basis of acre. It was pointed out by the Hon. Finance Minister that even the United Planters' Association of Southern India who are vitally and intimately concerned with this tax were not for it and they wanted the tax to be levied on the income basis. Even with regard to land revenue there is the progressive view that the tax should be on income and not on any flat basis, like 'so much money for so many acres.' That being so, I do not understand why the hon. Member from Chettinad wants to base the tax on acreage. This is a convenient tax in the sense that it will not adversely affect any one. The tax will be higher when the income is higher; when the income is lower, the tax will also be lower. So, it adjusts itself according to the income. But a flat rate is not like that. Income or no income, whether income is great or small, one will have to pay a certain amount. In that sense this is an improvement. Many public bodies have advocated this system of levying tax on income. Therefore, I think this is a good way of taxing.

" The hon. Member who opened the debate yesterday—I was not here, but I got some idea of his speech—seems to have made some remarks about the British planters and how they have been exploiting. May be there is exploitation, I am not coming forward to deny it. But one thing we must admit. It is due to their enterprise and pioneering that these tea, coffee and other plantations have come into being in this country. They were the pioneers in bringing this industry to our country. Let us just imagine what would have been the state of affairs 60 or 70 years ago. They went to the jungles infested with wild animals, malaria and cleared them risking their lives and then brought vast tracts of land under cultivation. I think, Sir, that we must pay them a meed of appreciation and admiration. As far as the exploitation part of it is concerned, well, there may be exploitation. Because we have given them praise for their pioneering, it does not mean that we must not criticise them for any exploitation that they may be carrying on.

" I had an occasion to go to the Anamalais and visited many of these plantations, some belonging to Europeans and some belonging to Indians. The state of affairs of labourers and their dwelling houses there was bad. When I saw that, I thought these people are making so much money in this industry; why

[Sri M. A. Manickavelu] [16th February 1955

should they not divert a little portion of it in order to give these poor people some facilities and some amenities at least as regards the elementary standard of living. That is what I thought. In this connexion, I also want to say one other thing, though it may not be quite palatable to some. Some of the dwellings of these labourers in the plantations owned by Europeans were better than those in the plantations owned by Indians. I was very sorry to note that, but it was so. In some European-managed plantations, they have given better facilities and better amenities for their labourers than in some of the Indian-owned plantations. Why I say this is to show that there are good people among Europeans also. On that score, we should not say that only a certain set of people are exploiting.

" Hon. Members said that the tax is very low and that they can be taxed further so that more money may be forthcoming. But we must also take into account one other factor. There is much competition in this industry as in many other industries. For instance, I will say about cinchona. Government undertook the cultivation of cinchona; but there is competition on account of the large-scale growing of cinchona in Malaya and other countries. We are not able to compete with them. Similarly, in the case of tea and coffee, other countries have also taken to it. There, that is, in other countries, conditions for production are more ideal and better. So we must take all these into consideration when we want to tax, and not put unnecessarily heavy burden on these industries. We must consider how the world market affects this industry. It was all right years ago; they made a lot of profit. But there is now much competition. In Africa, they are trying to grow. In Malaya and so many other places, they are doing it, because they have found that much money is forthcoming in this industry. Therefore, if we begin to impose too heavy a burden on this, well, either the industry will be killed or there may be a diversion to other countries. So, it is not very wise to proceed too fast. We have made only a beginning and we do not know what the implications of it will be. It is well we have put the tax at As. 5–6. We shall watch and see how it works. There is nobody to tie our hands if we want to proceed further. Therefore, as the hon. Member from Uthiramerur expressed, we should not kill the goose that lays the golden egg. Now it may look very attractive to kill the goose or the hen whatever it is . . . (interruption by the Deputy Leader of the Opposition) and eat it too. We can have one sumptuous meal and it is all over. But with the egg it is not like that. We can go on having eggs for one year, two years and so on. Therefore, it is wiser to keep it living as long as it lays eggs. In that sense, it is better that we proceed cautiously. That is my submission, Sir.

4 p.m. " Reference was made to the omission of super-tax. One reason for it was given by the hon. Deputy Leader of the Opposition. Another reason is this. I think there was a Court decision according to which the Government could tax only the

16th February 1955] [Sri M. A. Manickavelu]

agricultural income of a company collectively and could not tax the dividend received by each shareholder of the company individually. Super-tax was proposed only for people getting a higher income. When we could not levy super-tax on individuals, we thought it better to leave out the tax altogether instead of applying it to the joint stock company alone. But we did not stop with that. In the original Bill, the maximum rate of agricultural income-tax was four annas in the rupee and a super-tax also. But as the super-tax was given up, we have raised the rate of agricultural income-tax to five annas and six pies in the rupee.

" With regard to the question of exemption, much concession was given to the small growers. We have exempted from tax agricultural income from a plantation of not more than five acres in extent if used for growing tea or not more than fifteen acres in extent if used for growing coffee or any other crop.

" Provision is also made for the composition of the tax by any person who derives agricultural income from a plantation not exceeding twenty acres in extent if used for growing tea or an extent equivalent thereto if used for growing any crop other than tea. This is similar to the right of composition of the tax which we have given to the owners of stage carriages. When the tax is compounded, the planters need not have the bother of keeping accounts and be subject to all the other restrictions. This is a great concession to the small growers and it has been generally welcomed.

" The Deputy Leader of the Opposition asked why the Government should not take steps to check the income from plantations going out of this country. He himself answered it by saying that it was an all-India question. But that does not mean that this Government should not take any initiative in the matter; we must take the initiative. We will find ways and means of getting a reasonable share of the profit by way of tax. There is a sort of combine or monopoly in the trade. The Deputy Leader of the opposition said that it was in the hands of the Britishers and that they were working it to their interest. It may be true to some extent. But we do not know the all-India condition. In our State, tea is grown only in a few places, like the Nilgiris. We must go more deeply into the matter and see how best we could tackle that problem. If as much as one hundred crores of rupees are going out of India as has been alleged by the Deputy Leader of the Opposition, it is for the Central Government to take action. The Central Government are trying to tax the income as much as possible. They are increasing the excise duty from time to time and are levying export duty, etc. If all the taxes are concentrated at one time, it will be killing the goose that lays the golden eggs. So we must go rather cautiously.

"With regard to labour conditions also, people have been sleeping all along and nobody cared for labourers. Only after we came to know the real state of affairs, we took steps. The Central Government have passed a legislation for giving greater facilities and better conditions to workers. The Act has been put into effect and in course of time, conditions will improve. It will take some time to get the full benefit of the Act. Generally, exploiters or profit-makers do not voluntarily come forward to provide amenities so long as they are not pressed. My hon. Friend from Erode will say that there is a Tamil proverb which means that as long as a man is asleep, one can twist the strand of a thread on his thigh. Likewise, there was nobody to champion the cause of the poor people then. The Communists were, like the submarine below the surface of the water, remaining underground all the time and coming out off and on. It is only after the last general elections they have come on the scene. They take interest in labour. We are trying to improve the condition of the workers. Their condition will surely improve. They have got some amenities like the provision of one or two cumblies during winter, and I think there is an agitation for an umbrella being given. We shall take care to improve their condition.

"The hon. Member from Manamadurai, usually a very quiet and orthodox gentleman, was to-day very chivalrous and championed the cause of women. He asked why a distinction should be made between a woman-owner and a man-owner. I do not want to answer the point at this stage. When the relevant clause comes up, I shall deal with it and try to help him as far as possible because he is championing, I think, a good cause. I am also chivalrous. Therefore I shall try to do whatever is possible.

"With regard to helping owners of small tea estates, we cannot do it in a day. It is said that they are at the mercy of the factories, that they have to go and give the green produce to them and submit themselves to the price and other restrictions imposed by them. It may be so. But how are we to improve the position? As I said, we cannot do it in a day. The Deputy Leader of the Opposition suggested that they should be helped by the Government themselves starting factories and by other ways. I agree that we should do something in the matter. After we gain some experience in working this Act and get some revenue, the Government will have an intimate knowledge about the industry and will be in a position to tackle the problems of the owners of small tea estates—how to meet the combine or monopoly and so on. We have just made a beginning. It is accepted that this is a progressive piece of legislation in that it proposes a tax on a national basis. We shall proceed with this and see how best we can improve the state of affairs in the industry.

"There is nothing more for me to say at this stage. As regards the details, we shall carefully look into them when the clause by clause discussion takes place."

16th February 1955]

MR. SPEAKER :—" The question is—

'That the Madras Plantations Agricultural Income-tax Bill, 1954, as amended by the Select Committee, be taken into consideration.' " 4-10 p.m.

The motion was put and carried.

Clause 3 was put and carried.

* SRI M. KALYANASUNDARAM :—" Sir, although clause 3 has been passed, I want to make a submission with regard to that. We were under the impression that the general discussion would go on till 5 p.m. to-day and that clauses will be taken up for consideration only on Monday. That would have enabled us to give notice of amendments. Now, I find that there are some amendments to be moved to clause 3 although I have not given notice of any. Therefore, may I suggest that before we take up the other clauses, we may have the one-hour debate? "

MR. SPEAKER :—" The Hon. Minister concerned is not here."

THE HON. SRI M. A. MANICKAVELU :—" He is engaged in the Legislative Council, Sir. There are no amendments to clause 4. Therefore, we may take it up straightway."

* SRI M. KALYANASUNDARAM :—" There is no objection to proceeding with the Bill. But I am sorry I am not prepared now. I have some amendments to move to clause 5. But we have been taken by surprise."

MR. SPEAKER :—" What does the House want to do? I shall simply carry out its decision whatever it be. If the House wants a recess for an hour, I have no objection. But the best thing in that event will be to adjourn the House for the day once for all."

SRI K. C. GOPALAN UNNI :—" The one-hour debate can be had to-morrow."

MR. SPEAKER :—" There is a proposal that we need not continue the consideration of the Bill clause by clause now. It is the desire of the House that the one-hour debate can be taken up to-morrow. The hon. the Deputy Leader of the Opposition has suggested that we may adjourn now and meet at 5 p.m. and have the one-hour debate. Instead of that, we can as well adjourn the House for the day and have the one-hour debate to-morrow."

SRI M. KALYANASUNDARAM :—" I agree with your suggestion, Sir."

THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, I think we could start with clause 5 and see how far we proceed. If that is not liked, at least we shall adjourn till 5 p.m. We can have the one-hour debate at 5 p.m."

SRI M. NARAYANA KURUP :—" We can take up consideration of those clauses for which the hon. the Deputy Leader of the Opposition is prepared."

MR. SPEAKER :—" We can postpone consideration of some clauses."

* SRI M. KALYANASUNDARAM :—" In the same way, will I be given the right to reopen clauses passed? "

MR. SPEAKER :—" If the House gives permission, it can be done."

SRI K. RAJARAM :—" If the hon. the Deputy Leader of the Opposition has any amendment to give to clause 4, we can withhold the consideration of that clause and take it up later."

* SRI M. KALYANASUNDARAM :—" May I submit that because I was not ready, clause 3 had been passed."

MR. SPEAKER :—" Shall we take up clause 4? "

SRI M. KALYANASUNDARAM :—" I am anxious only about clause 3."

MR. SPEAKER :—" To-morrow we can take it up, if the House gives permission to that effect."

Clause 4 was then put and carried.

Clause 5.

MR. SPEAKER :—" The motion moved—

' That clause 5 do stand part of the Bill.' "

* SRI M. NARAYANA KURUP :—" Sir, I move the following amendments which stand in my name :—

' For *the existing item* (b), substitute *the following* :—

" (b) *any rent paid to, or other amounts mentioned in sub-clause* (a) *recovered on behalf of, the landlord or superior landlord, as the case may be, in the previous year in respect of the plantation from which the agricultural income is derived;* "

In item (1), *Explanation, line 2, after the word* " *paid* ", insert *the words* " *or compulsorily recovered* ".' "

SRI S. RAMALINGAM :—" I second the amendments, Sir."

* SRI M. NARAYANA KURUP :—" Sir, clause 5 says—

' The agricultural income of a person shall be computed after making the following deductions, namely :

(a) any sums paid in the previous year on account of land revenue due to the Government, local rates and cesses and muncipal taxes in respect of plantations ;

16th February 1955] [Sri M. Narayana Kurup]

(b) any rent paid in the previous year to the landlord or superior landlord, as the case may be . . .'

" Now, Sir, this tax is of course to be recovered from the owners. There may be a tenant, who has to pay Rs. 1,000 as rent to the land-owner. Say, he has paid Rs. 100 or Rs. 500. There is a decree on behalf of the land-owner. The income of the land-owner is attached and sold or by other means it is recovered. If the definition stands as it is, the tenant will not get under the law the deductions for these. That will be a very hard case. It is only to make things clearer that I have given notice of my amendment. The amounts recovered from him on behalf of the land-holder have to be accounted. It is only a slight modification that is sought to be made by my amendment which may be accepted." 4-20 p.m.

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Mr. Speaker, Sir, I submit that the amendment is not necessary because the word 'paid' will also include amounts recovered compulsorily. So I think the amendment is not necessary."

SRI M. NARAYANA KURUP :—" I do not press my amendments, Sir."

The amendments were by leave of the House withdrawn.

* SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" I have not given notice of any amendment, Mr. Speaker, Sir. But I find sub-clause (g) of clause 5 requires some verbal amendment. Instead of the words 'for such cultivation and transport or both;' occurring in sub-clause (g) it would be better if we substitute the words 'for such cultivation or transport or both;'. That would be the proper wording of the sub-clause. I suggest the substitution of the word 'or' for the word 'and' in line 5 of sub-clause (g) of clause 5."

MR. SPEAKER :—" It is only a verbal amendment and we can take it up at the end. The question is—

'That clause 5 do stand part of the Bill.' "

The motion was put and carried.

Clause 6.

MR. SPEAKER :—" Motion moved—

'That clause 6 do stand part of the Bill.' "

SRI K. P. GOPALAN :—" Mr. Speaker, Sir, I move the following amendments which stand in my name :—

'(1) Omit *item* (ii).

(2) Add *the following proviso to this clause* :—

" *Provided that in all cases where the company or individual owner possesses estates in other States and/or countries, a separate account of acreage of the lands*

possessed, the details of the plants raised, the produce, amounts realized, expenditure and other relevant matters concerning his possessions in this State should be maintained".'"

* Sri M. KALYANASUNDARAM :—" I second the amendments, Sir.

" ஒரே எஸ்டேட் நம்முடைய ராஜ்யத்தில் ஒரு பகுதியும் திருவாங்கூர்-கொச்சியில் ஒரு பகுதியும், மைசூரில் ஒரு பகுதியும் இருந்தால் அதனுடைய கணக்கை மதிப்பிட முடியாது. ஒரே கணக்காக வைத்துக் கொண்டிருந்தால் அந்தக் கணக்கை வைத்துக்கொண்டு நம்மால் மதிப்பிட முடியாது. நம்முடைய ராஜ்யத்தின் வருமானத்தைப் பொறுத்த வரையில் தான் நாம் கணக்குப்போட முடியும். ஒரு பங்கை மட்டும் நம்முடைய ராஜ்யத்தில் வைத்துக்கொண்டு அதற்குக் கணக்கு வைத்துக் கொண்டிருப்பது என்பதும் முடியாது. அதனால் கணக்குகள் தப்பிப்போவதற்கு இடம் ஏற்படும். நாம் எல்லாவற்றிற்கும் நியாயமாக வரி விதிக்க வேண்டும். அதனால் நாம் '**Other Countries**'' என்பதை விட்டுவிடலாம். வேறு தேசத்தில் இருக்கும் பங்குகளுக்கு நம்மால் வரி போட முடியாது. இங்கு கணக்கு வைத்துக்கொள்வது என்பதும் முடியாது. பல ராஜ்யங்களுடைய கணக்கையொட்டி மொத்தமாக இங்கு வைத்துக்கொண்டிருப்பார்கள். அதனால் கணக்கு தப்பிப் போகாமலிருப்பதற்காகத்தான் நாங்கள் திருத்தம் கொடுத்திருக்கிறோம். அந்தத் திருத்தத்தை ஒத்துக்கொள்ள வேண்டும். இதைப்பற்றி செலக்ட் கமிட்டியில் விவரமாக விவாதிக்கவில்லை. மற்றவைகளைப்பற்றி விவரமாக விவாதிக்கப்பட்டது, அவைகளுக்கு மாறுதல் செய்திருக்கிறார்கள். அதனால்தான் அவைகளுக்கு அதிகமாக இப்பொழுது திருத்தங்கள் கொடுக்கவில்லை. இதற்கு மட்டும் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

* Sri K. P. GOPALAN :—" I want to say only a few words on these amendments, Sir. I have known many European companies owning estates not only in this State but in other States also. They own estates in other countries also. They keep one account for all these estates. Suppose, the question of payment of bonus is raised and the Appellate Tribunal asks the companies to produce their accounts. They never show their accounts. They say : 'We have only one account.' So it would be better for the Government to ask for the maintenance of separate accounts to ascertain how much profit is made by the estate in this State. The profits made by these companies from the estates in this State should be known to Government as well as to the public. That would be better for improving the conditions of the labourers. It will also be of help to the Industrial Tribunals and other courts. Therefore, it is very necessary that the companies should be asked to maintain separate accounts for the estates in this State. Whatever profit they get from these estates should be made known to the Government. I hope Government would accept my amendment."

Sri V. R. KRISHNA AYYAR :—" I also support the amendment moved by the hon. Member Sri Gopalan for this reason. As was pointed out by the hon. Member Sri Gopalan, most of these European companies own lands or plantations in more than

16th February 1955] [Sri V. R. Krishna Ayyar]

one State and sometimes outside India altogether. In such cases, when we propose to levy agricultural income-tax, they might say, there is no profit at all or there is no income at all, because the overall picture may be manipulated or may actually be a loss. But then what this State is concerned with is the profits or income made by the companies in this State. If there is an income made in the soil of the plantations in the Madras State naturally the State Government of Madras are entitled to levy a tax. That tax may be evaded sometimes by this device of showing a single account for all the estates. They may say: 'We may have made a profit in respect of the estate in this State, but we have lost heavily taking an overall picture of all the estates. Therefore, we do not have to pay any tax.' In order that the companies may not evade payment of the tax/on that income derived from the estates located in this State on the plea that there was only a loss taking an overall picture of all the estates, the Government must accept this amendment. If separate accounts are directed to be maintained in respect of profits or income earned out of the estates in Madras State, on that a levy can be made by this Government, irrespective of the profit or loss elsewhere with which we in this State are not concerned. This will facilitate matters and probably secure for the Government the revenue which is its due."

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, I do not find my way to accept the amendments. Even without this amendment, we can find out the exact state of affairs of the companies in respect of estates located in this State. Therefore, I do not think this amendment is necessary."

MR. SPEAKER :—" Is the hon. Member withdrawing his amendments? "

SRI K. P. GOPALAN :—" I am not withdrawing my amendments, Sir."

MR. SPEAKER :—" The question is—

' *Omit* item (ii).' "

The motion was put and lost.

MR. SPEAKER :—" The question is—

' *Add* the following proviso to this clause :—

" Provided that in all cases where the company or individual owner possesses estates in other States and/or countries, a separate account of acreage of the lands possessed, the details of the plants raised, the produce, amounts realized, expenditure and other relevant matters concerning his possessions in this State should be maintained ".' "

The motion was put and lost.

MR. SPEAKER :—" The question is—

' That clause 6 do stand part of the Bill.' "

The motion was put and carried.

Clause 7.

MR. SPEAKER :—" Motion moved—

' That clause 7 do stand part of the Bill.' "

4-30 p.m. *SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, வரவு செலவுக் கணக்கு ஒழுங்காக வைத்திருக்க முடியாதவர்கள் அல்லது சமர்ப்பிக்காதவர்கள் விஷயத்தில் விவசாய வருமான வரி அதிகாரி தாங்களாகவே குத்து மதிப்பாக ஒரு தொகையை நிர்ணயிக்கலாம் என்று இம்மசோதாவின் ஏழாவது பிரிவு கூறுகிறது. இதை எந்த அடிப்படையில் விவசாய வருமான வரி அதிகாரிகள் நிர்ணயிக்க வேண்டுமென்று அவர்களுக்கு சர்க்கார் அதிகாரம் கொடுக்க உத்தேசித்திருக்கிறது என்பதை மந்திரி அவர்கள் தெளிவுபடுத்த முடியுமா என்று நான் கேட்கிறேன்."

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Even now the income-tax authorities do not have a definite data. They make a hypothetical assessment and it is open to the assessee to disprove it. So, there is no difficulty about it."

MR. SPEAKER :—" The question is—

' That clause 7 do stand part of the Bill.' "

The motion was put and carried.

Clause 8.

MR. SPEAKER :—" The question is—

' That clause 8 do stand part of the Bill.' "

The motion was put and carried.

Clause 9.

MR. SPEAKER :—" Motion moved—

' That clause 9 do stand part of the Bill.' "

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" Sir, the Hon. the Minister for Revenue spoke about chivalry and all that. I do not know whether he is going to move any Government amendment now."

THE HON. SRI M. A. MANICKAVELU :—" Is it to this clause? "

* SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" Yes, it is to sub-clause (2) of this clause. Sub-clause (2) says—

' In computing the total agricultural income of any individual . . .'

16th February 1955] [Sri P. S. Krishnaswamy Ayyangar]

The word ' individual ' here will denote only a ' male ' and I want that it should include a ' female ' also for the purpose of assessment. Therefore, I propose the following amendment :—

' In computing the total agricultural income of any individual for the purpose of assessment, there shall be included—

(a) so much of the agricultural income of a wife or a husband as the case may be or minor child of such individual as arises directly or indirectly.

(i) from the membership of the wife or the husband as the case may be in a firm of which her husband or his wife as the case may be is a partner . . .'

Such amendments will have to be made. Since I guessed from the gesture of the Hon. Minister that he was amenable to such an amendment, I thought that I might move that amendment now.''

* Sri M. NARAYANA KURUP :—'' It seems to me that the word ' individual ' means only an assessee. It is a general term. Instead of the word ' person ' the word ' individual ' is used here. It is not a matter between ' he ' and ' she ' but the whole thing.''

* Sri K. PARTHASARATHY :—'' Mr. Speaker, Sir, the question of chivalry does not come in here. It is a question of collecting the tax. I wish to submit that in these days there may be a case where the assessee is a male and there may be another case where the assessee is a female. It is possible that the husband may be an assessee the wife having a lessor income. The object of this clause is that if the wife gets any income by virtue of her membership in a firm of which her husband is a director, that income also should be taxed. Suppose the wife is the principal earning member and is the assessee and is also a director of a firm and her husband is a minor shareholder. What is to happen in such a case? They cannot escape from assessment, and we have to make provision for such cases also. Therefore, the income of both the husband and his wife will have to be taken into account. In other words, the income of the family shall be taken into account while levying this tax. That is the object of this clause and if such a course is adopted, there would be no leakage or evasion of the tax.''

Sri S. RAMALINGAM :—'' I also feel that the amendment of Sri Krishnaswamy Ayyangar should be accepted.''

Mr. SPEAKER :—'' He has not moved any amendment.''

Sri S. RAMALINGAM :—'' Of course, no written amendment has been moved. He wants the Hon. Minister to accept his oral amendment.''

* Sri T. ANANTA PAI :—'' Sir, under the Indian Income-tax Act, the husband and the wife are clubbed together and their income is assessed. So also here my hon. Friend, Sri Krishnaswamy Ayyangar wants that it should be clubbed together and

[Sri T. Ananta Pai] [16th February 1955

I agree with him that there is no point in leaving any loophole in the Bill by which any income may escape assessment. The object of the Bill should not be defeated.

" So far as the question of chivalry is concerned, we have not been chivalrous enough to see that the wife does not escape assessment. So all talk of chilvalry will have to be set aside."

Mr. SPEAKER :—" If the Hon. Minister wants time to consider the amendment . . ."

* The Hon. Sri M. A. MANICKAVELU :—" I do not think that it is necessary in view of the observations made by the hon. Member, Sri Narayana Kurup. The word ' assessee ' includes both man and woman."

Sri S. RAMALINGAM :—" Sub-clause (2) (*a*) says—

' so much of the agricultural income of a wife or minor child of such individual as arises directly or indirectly . . . '

Here the word ' husband ' also must be added. That is why the hon. Member, Sri Krishnaswami Ayyangar, wants that such an amendment should be moved."

Sri P. S. KRISHNASWAMY AYYANGAR :—" No doubt ' man ' includes ' woman ' but ' wife ' will not include ' husband '. (Laughter.) However, I do not move the amendment."

Mr. SPEAKER :—" The question is—

' That clause 9 do stand part of the Bill.' "

The motion was put and carried.

Clause 10.

Mr. SPEAKER :—" The question is—

' That clause 10 do stand part of the Bill.' "

The motion was put and carried.

Clause 11.

Mr. SPEAKER :—" The question is—

' That clause 11 do stand part of the Bill.' "

The motion was put and carried.

Clause 12.

Mr. SPEAKER :—" Motion moved—

' That clause 12 stand part of the Bill.' "

16th February 1955]

SRI K. P. GOPALAN :—" Sir, I move the following amendment which stands in my name :—

' *In line* 2, after *the words* " *in any year* ", insert *the words* " *on the plantation or plantations he possesses in this State* ".' "

SRI S. RAMALINGAM :—" Sir, I second the amendment."

MR. SPEAKER :—" Amendment moved—

' In line 2, *after* the words " in any year ", *insert* the words " on the plantation or plantations he possesses in this State ".' "

* **SRI M. KALYANASUNDARAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு வருஷம் விவசாய வருமானத்தில் நஷ்டம் ஏற்பட்டிருந்ததானால் பிறகு லாபம் அடையக்கூடிய காலத்தில் இந்த நஷ்டத்தையும் கழித்துக்கொண்டு அதற்குமேல் இருக்கக்கூடிய வருமானத்திற்கு மட்டும்தான் வரி விதிக்கலாமென்ற நிலைமை ஏற்படும். பல கம்பெனிகளுக்கு சில வருஷங்களில் நஷ்டம் காட்டலாம். அந்த நஷ்டத்தை ' ரிசர்வ் ' தொகையிலிருந்து ஈடு கட்டி ' டிவிடன்ட் ' கொடுத்திருக்கிறார்கள். அந்த வருஷத்திலே ஒரு வருமானத்திற்கும் வரி போடப்படுவது இல்லை. அப்படியிருக்கும் போது, மொத்த நஷ்டம் பூராவையும் அடுத்த லாபம் ஏற்படுகின்ற வருஷத்தில் கழித்துக்கொள்ளவேண்டும் . . ."

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" The amendment speaks about possessions in the State." 4 40 p.m.

* SRI M. KALYANASUNDARAM :—" Sir, I am not speaking on the amendment but I am speaking generally on the clause. This clause is unnecessary.

" லாபம் அதிகமாக ஏற்படும்போது நாம் அதிகமாக வரி போடப்போவதில்லை. ஐந்தரையணாவுக்கு மேல் வரி இல்லை என்பது சர்க்காருடைய கொள்கையாக இருக்கப்போகிறது. அதுதான் முடிவாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். மூன்றாவது பிரிவுக்கு நான் திருத்தங்கள் கொடுக்கலாமென்று இருக்கிறேன். மூன்றாவது பிரிவு திரும்பவும் நாளைக்கு ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சமயத்தில் சர்க்காருடைய கொள்கை தெரியப்போகிறது. வரியை உயர்த்துவதற்கு சர்க்கார் தயாராயில்லையென்று தெரிகிறது. இதுவரை கிடைத்திருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து தேயிலைத் தோட்டங்களை வைத்திருக்கும் முதலாளிகளுக்கு எவ்வளவு லாபம் அதிகமாகக் கிடைத்துக்கொண்டு வருகிறதென்று தெரிகிறது. பதினைந்து வருஷ காலத்தில் ஏதோ ஒரு வருஷத்தில், அதுவும் சில கம்பெனிகள்தான் நஷ்டமடைந்திருக்கின்றன . . ."

MR. SPEAKER :—" The hon. Member Sri M. Kalyanasundaram wants to move amendments to this clause also. I hope I have the permission of the House to postpone consideration of this clause."

The consideration of the clause was. by leave of the House, postponed.

Clauses 13 and 14 were put and carried.

Clause 15.

MR. SPEAKER :—" Motion moved—

' That clause 15 do stand part of the Bill.' "

[16th February 1955

* SRI M. NARAYANA KURUP :—" Sir, I move the amendment which stands in my name :—

> ' *In sub-clause* (3), *item* (*c*), add *at the end the words " or refer the matter to the bench consisting of all the three members ".'* "

SRI S. RAMALINGAM :—" Sir, I second the amendment."

MR. SPEAKER :—" Amendment moved—

' In sub-clause (3), item (*c*), *add* at the end the words " or refer the matter to the bench consisting of all the three members ".' "

* SRI M. NARAYANA KURUP :—" Sir, this small amendment is very necessary if the Government want to do justice to the assessees. The Appellate Tribunal has been instituted with a purpose, namely, that it may view dispassionately the assessment that has been carried out by the Income-tax Officers. It is quite likely that where a point is very intricate there may be a difference of opinion between the members and sub-clause 3 (*c*) as it stands provides that when an appeal is heard by a Bench consisting of two members, and the members are divided in their opinion on any point, the appeal is to be dismissed. This is a very hard case. The clause itself has provided for three members so that in appropriate cases there can be a judgment by a majority. My amendment will come into force only if the two members are agreed on the point but they think that the matter about which there is a difference of opinion is so important that it may be referred to the full Bench. This amendment does not mean that all appeals where there is a difference of opinion should go to a Bench of three. In cases where the two members themselves feel that they want the opinion of the third member, they are helpless to do so if the sub-clause stands as it is. It is therefore a very equitable amendment and I hope the Government will find no difficulty in accepting it because unless the two members agree there can be no reference to the third member."

SRI S. RAMALINGAM :—" Sir, sub-clause 3 (*c*) reads as follows :—

> **' Where an appeal is heard by a Bench consisting of two members, and the members are divided in their opinion on any point, the point shall be found against the appellant . . .'**

" கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு ஜட்ஜுகளைக்கொண்ட ஒரு பெஞ்சு அப்பெலட் ட்ரிபியூனல் விசாரணை செய்யக்கூடிய சமயத்தில் அவர்களுக்குள் ஒரு விஷயத்திலாவது எந்த அபிப்பிராய பேதம் ஏற்பட்டுவிட்டால் அப்பீல் செய்துகொண்டவனுக்கு விரோதமாக தீர்ப்பு அளிக்கவேண்டுமென்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. இரண்டு ஜட்ஜுகளுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்படுகிறது என்று சொன்னால் அது அப்பீல் செய்துகொண்டவர்களுடைய குற்றம் அல்ல. ஆகவே அந்த டிரிபியூனல் மூன்றாவது நபரைச் சேர்த்து மூன்று பேர்கள் கொண்ட டிரிபியூனலை ஏற்படுத்தி நியாயமான முறையில் தீர்ப்பு அளிப்பதுதான் முறையே தவிர அப்பீல் செய்துகொண்டவருக்கு விரோதமாக தீர்ப்பு அளிப்பது முறையல்ல.

அப்பீல் செய்வதவர்களுக்கு விரோதமாகவும், சர்க்காருக்குச் சாதகமாகவும் தீர்ப்பு அளிக்கவேண்டுமென்று கோரக்கூடாது. வேண்டுமானால் அப்பீல் செய்தவர்களுக்குச் சாதகமாக தீர்ப்பு அளிக்கவேண்டுமென்று திருத்தம் செய்யலாம். கனம் அங்கத்தினர் ஸ்ரீ நாராயண குருப் அவர்கள் சொன்னதுபோல மூன்று பேர்களைக்கொண்ட ட்ரிபியூனலை அமர்த்தி அப்பீல் செய்வதற்கான சந்தர்ப்பத்தை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.''

SRI V. R. KRISHNA AYYAR :—'' Mr. Speaker, Sir, I also support the amendment because, with all deference to the Government, it looks outrageous to me that there should be a provision of this kind. If there is reference to, or the matter is heard by the members of the tribunal and they disagree, then the effect is that the Taxing Officer is exalted into the position of a member and there is also the presumption that he gives an opinion in favour of the Government, for this is what it comes to. Usually it is the majority decision that prevails whether it is the High Court or any other tribunal. Wherever there is to be a decision, right from the Panchayat Court to the High Court, the decision of the majority must prevail. If a Bench of two members hear an appeal what normally happens in the High Court must happen here also. In the High Court where two Judges sit as a Bench and there is a difference of opinion, it is referred to a Full Bench of three Judges sitting together or it is referred to a third Judge. On the other hand, what we are told by this provision or what happens is, that when there is a difference of opinion both the members of the tribunal forfeit their capacity to decide and the Taxing Officer becomes the deciding Judge, that is, the third member, because it is his opinion that prevails. This is really wrong in principle.

'' Secondly where an appeal is referred to a tribunal, the tribunal must decide it. If one member has a difference of opinion with the other member, it does not mean that the Government should always win. It is proper that we should follow the principle which governs tribunals and their decisions, namely, decision by majority or where there is an equally divided opinion it should be referred to the third member. That is the proper thing to do. I think this vicious principle which has been borrowed from somewhere and which has got into the Sales Tax Act still persists. It is not known anywhere else in any other statute. The Madras Government after experimenting with it in the Sales Tax Act are now trying to introduce it in other legislative measures also. I wish it had stopped with the Sales Tax Act and did not permeate into or pollute other statutes.''

SRI M. KALYANASUNDARAM :—'' கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். இதை சர்க்கார் ஏற்றுக்கொள்வது அவசியம் என்பது என்னுடைய அபிப்பிராயம், சப்-கிளாஸ் (4) சொல்வதாவது.

' Subject to the provisions of this Act, the Appellate Tribunal shall have power to determine the times and places of its sittings and to regulate its own procedure and the procedure in all matters arising out of the discharge of its functions.'

" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உட்பிரிவு (4)-ஐ நான் ஆட்சேபிக்கிறேன். ட்ரிபியூனல் எந்த முறையில் நடக்கிறது என்பதற்காக பூரா அதிகாரத்தையும் அவர்களே நிர்ணயித்துக்கொள்ளச் செய்வது சரியல்ல. ஆகவே அந்த உபப்பிரிவை எடுத்துவிடவேண்டும். விதிகள் தயாரிக்கும் காலத்தில் இதற்கு விதிமுறைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப்பற்றி சர்க்கார் ஆலோசனை செய்து முடிவுக்கு வரவேண்டுமென்று சொன்னால் இந்தப் பிரிவை இப்பொழுது ஒத்திப்போட்டு பிறகு விவாதத்திற்கு வரும்போது எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவிக்க விரும்புகிறேன்."

4-50 p.m. * Sri K. PARTHASARATHY :—" Sir, the provision contained in the Bill has been characterised by my learned Friend as outrageous. I am really surprised at that. No doubt the provision seems to be just against the assessee. We may be interested to know that there is some provision in the Civil Procedure Code where on second appeal, if two judges disagree, the lower Court judgment prevails. This is a similar provision. There is nothing outrageous in it. It is something serious to say so. So far as the provision itself is concerned, where the two Tribunal Members do not agree, the best course will be to leave it to a third member so as to have a fair deal, especially where the other party is the Government."

Mr. SPEAKER :—" I shall now put it to the vote of the House."

Sri M. KALYANASUNDARAM :—" Sir, I made a proposal to take it up later. The Hon. Minister for Public Works is also here and we can proceed with the one-hour debate. Therefore, we can postpone consideration of this clause to the next day."

Mr. SPEAKER :—" I have no objection. Whatever the House decides, I shall do so."

* The Hon. Sri M. A. MANICKAVELU :—" Sir, let me have my say and see how hon. Members react. As regards the point raised by the hon. Deputy Leader of the Opposition, it is rather funny. He wants to take away the right of the Tribunal as to where to sit, when to sit and all that and he wants us ' to determine the place and sitting and regulate the procedure '. That is uncalled for.

" With regard to the other amendment, Sir, it was said that when a decision is taken in appeal and when the members differ, it must be left to a third member. The provision here is the lower Court's, or in other words, the officer's decision is upheld. As has been pointed out by my hon. Friend behind, it is done under the Civil Procedure Code. It is the same case in High Courts also. Therefore, I do not think there is any necessity for a change here. The decision of the lower Court is reinforced by an opinion of one of the Judges of the Tribunal. That means there is a majority. As against one opinion, there are two opinions —first the lower court's opinion and second the opinion of one

16th February 1955] [Sri M. A. Manickevelu]

of the members of the tribunal. Therefore, there is a majority and it conforms to the rules of majority. There is no necessity therefore to accept the amendment."

* Sri M. NARAYANA KURUP :—" Sir, the argument advanced by the Hon. Minister, in my opinion, is fallacious. Because here it is not two Judges agreeing as he thinks. I entirely agree that in the civil cases, it is the lower court's judgment passed by a Judge that prevails. But here it is an Income-tax Officer, an executive officer appointed by the Government whose decision is upheld. It cannot be on a par with that of a Judge. If that is not the contention, you cannot say that it is on a par with Civil Procedure Code. In the civil cases, it is done by an independent judiciary and the executive has nothing to do with it. Here it is the Agricultural Income-tax Officer who is directly appointed and controlled and whose conduct is regulated by the Commissioner and the Government and the Minister. You cannot say that he is in a position similar to that of an independent Judge of the judiciary. He does not enjoy any independence. Therefore, that argument will not apply in this case and I beg to say that the concession or right conferred in this case is only in cases where two members do agree.

" Then, the amendment suggested by the hon. Deputy Leader of the Opposition is surprising. I oppose it. It wants that regulations should be made by the executive and not by the judiciary itself. That is a process which is designed to curtail the judiciary. Always we have been agitating the other way, for a more independent, impartial and just judiciary.

"I submit again that inasmuch as the decision of the officer is not on a par with that of an independent Judge, it should be referred to a third member and I request the Hon. Minister to give at least this small concession. The Hon. Minister quoted a part of the speech of the hon. Member behind him, but conveniently forgot the latter portion of his speech where he himself said, 'to create a feeling of justice it would be well to leave it to a third member.' I would only request the Government to accept the amendment."

* Sri M. KALYANASUNDARAM :—" Sir, on a point of explanation. I support the amendment moved by the hon. Member Sri Kurup. Regarding the suggestion I made, I think I am right inspite of the explanation given by the hon. Member Sri Kurup. Because, if the procedure is fixed in the prescribed rules, this House will have an opportunity to correct it or express its opinion on it, for it is to be placed before this House. That is so far as his objection is concerned.

" With regard to what the Hon. Minister says, I have to request him kindly to refer to the original Bill which was submitted to the Select Committee. It was said :

> 'Subject to the provisions of this Act, the Appellate Tribunal shall have power to regulate its own procedure and the procedure in all matters arising out of the discharge of functions.'

[Sri M. Kalyanasundaram] [16th February 1955

It is not with regard to the place, timings, etc., that the Tribunal is requried to decide its procedure of its own accord. But it is with regard to the method of enquiry, taking of evidence, allowing exhibits and all that and so, such powers should not be in the Tribunal itself. It should be prescribed in the rules so that this House may have an opportunity to express its opinion on it. This was specifically proposed to avoid calling planters often to Madras to appear before the Tribunal. It can go on sitting either in Coimbatore or Salem where it is necessary. It is for that purpose this was proposed. But the Government now want the procedure also should be left to the Tribunal. Therefore, I submit, that these should be defined in the rules."

* The Hon. Sri M. A. MANICKAVELU :—" Sir, as regards the point raised by my hon. Friend, Sri Kurup, the person deciding originally may be an officer. But he gives his decision in a judicial capacity in the sense that he conforms to the procedure of a judicial make-up. Therefore, even though he is an officer, he acts in a judicial manner and therefore there is nothing wrong in that.

" With regard to the points raised by the hon. Deputy Leader of the Opposition I still wonder why and how he wants to determine the timings and places of sitting of that body . . . (Interruption by the Deputy Leader of the Opposition : '*See* the original Bill.'). Why refer to the original Bill. The Bill before the House provides that ' subject to the provisions of this Act, the appellate tribunal shall have power to determine the times and places of its sittings and to regulate its own procedure and the procedure in all matters arising out of the discharge of its functions '. Sir, everywhere in every Tribunal—even in High Court—it is that body that regulates its own procedure. Therefore, we cannot adopt a novel procedure. It will be a funny procedure, Sir. I oppose it."

Mr. SPEAKER :—" I want to know whether Mr. Kurup is withdrawing his amendment."

Sri M. NARAYANA KURUP :—" Sir, it involves a question of principle and therefore I press for the acceptance of my amendment."

Mr. SPEAKER :—" The question is—

' In sub-clause (3), item (*c*), *add* at the end of the words " or refer the matter to the bench consisting of all the three members ".' "

The amendment was put and lost.

Mr. SPEAKER :—" I shall now put the original clause to vote. The question is—

' That clause 15 do stand part of the Bill.' "

16th February 1955]

(At this stage, the hon. Member Sri Krishnaswami Ayyangar rose in his seat and wanted to say something.)

MR. SPEAKER :—" It is already 5 o'clock. What is it the hon Member wants to say? "

* SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" Sir, I 5 p.m want to draw attention to the peculiar wording of sub-clause (1), namely, 'The Government . . . Tribunal consisting of one but not more than three members'. It should necessarily consist of one or more members. Therefore, it would be enough if it is worded 'consisting of not more than three members'. That would be the proper wording. Otherwise, it would lead to the inference that there can be a Tribunal without any member at all. (Laughter.) Therefore, in the expression 'consisting of one but not more than, etc.' the words *one and but* are unnecessary."

* SRI M. NARAYANA KURUP :—" Sir, generally when we say a 'Commission or Tribunal' there is a feeling whether it is one-man's Commission or what. It is only that which is stated here."

The clause was put and carried.

V.—DISCUSSION UNDER RULE 56 *RE* : COLLAPSE OF HOUSES NEAR CANALS IN THE LOWER BHAVANI PROJECT AREA.

* SRI K. R. NALLASIVAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, என்னால் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த பிரேரேபணையை நான் வாசிக்கிறேன்.

'The falling down of the houses that stand near the canals in the Lower Bhavani Project area and the failure of the Government to rehabilitate the inmates by giving them adequate compensation.'

" கீழ் பவானி பாசன பிரதேசத்திலும் மேட்டூர் மேல்கால்வாய்ப் பிரதேசத்திலும் சமீபத்தில் தண்ணீர் விட்டதனால் பல வீடுகள் விழுந்துவிட்டன என்பதைப்பற்றி இந்த சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அணைக்கட்டுகள் பிரதேசத்தில் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படவேண்டும் என்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது. கீழ்பவானி பாசன பிரதேசத்திலும் கீழ்பவானி தாலூகாவிலும் அந்த தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. கீழ்பவானி பாசனத்தில் 82 மைல் நீளத்திற்கு தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. மெயின் வாய்க்காலின் நீளம் 121 மைல்கள். கிளை வாய்க்காலிலும் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. இந்தப் பாசனத்தில் இருக்கக்கூடிய பிரதேசங்கள் எல்லாம் புஞ்சைப் பிரதேசங்கள். அங்கு பயிர் செய்வதற்கு பலர் கொப்பு வாய்க்கால் வெட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஊர்களில் தண்ணீர் வந்தவுடன் பள்ளத்தில் இருக்கும் ஊர்களில் நீர் தேங்கிவிட்டதினால் அங்கு தண்ணீர் கசிந்து வீடுகள் விழுந்துவிட்டன. அந்த நீர் கசிவின் காரணமாக சுவர்கள் எல்லாம் அப்படியே ஊறிப்போய் நின்றுகொண்டிருக்கிறது. வரப்போகிற மார்ச் மாதத்தில் தண்ணீரை நிறுத்திவிடப்போகிறார்கள். அப்பொழுது தண்ணீர் நிறைந்துள்ள இடமெல்லாம் காய்ந்துபோகும். அப்படி காய ஆரம்பித்தால் பலபல இடங்களில் எங்கெல்லாம் தண்ணீர் தேங்கி கசிவு ஏற்பட்டதன் காரணமாக ஊறிப்போய் நின்றுகொண்டிருக்கும் சுவர்களெல்லாம் அப்படியே கீழே விழுந்துவிடும். நான் உள்பட அங்குள்ள பாதிக்கப்பட்டவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் நேரடியாகக் கூட்டிக்கொண்டு போய் காட்டினோம். அவர்களும்

போய் பார்த்தார்கள். அப்படிப் பார்த்தும் இன்னும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்பொழுது இரண்டு வருஷங்களாக தண்ணீர் விடப்படுகிறது. அதனுல் பல ஊர்கள் பாதிக்கப்பட்டு மோசமான நிலைமையில் இருக்கின்றன. மார்ச் மாதத்தில் தண்ணீர் விடுவதை நிறுத்திவிடப் போகிருர்கள். அந்த சமயத்தில் நூற்றுக்கணக்கான வீடுகள் விழுந்துவிடும். பெரிய கட்டடங்கள் ஓரளவில் சமாளித்துக்கொண்டுவிடும். ஆனல் அநேகமாக ஹரிஜனங்களுடைய குடிசைகள் வீழ்ந்துவிட்டன. அவர்கள் அங்கேயே இருப்பதா அல்லது வெளியே போவதா என்று கூட தெரியாமல் இருக்கிருர்கள். அவர்களால் வெளியேயும் போக முடியவில்லை. பெருவாரியாக பாதிக்கப்பட்டவர்களெல்லாம் ஹரிஜனங்கள்தான். அவர்களுக்கு சர்க்கார் உடனடியாக நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். கீழ்பவானி பிரதேசம் சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ்வரும் பிரதேசம். அங்கே ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு திட்டம் இருக்கிறது. அந்த திட்டம் வெகுவாக செயல்படவில்லை. அந்தப் பிரதேசத்தில் மேட்டுக் காடுகளும் இருக்கின்றன. ஆனல் அக்விசிஷன் பண்ணவேண்டியதில்லை. அந்த நிலங்களை எல்லாம் குறைந்த விலைக்கு வாங்கி ஹரிஜனங்களுக்கு சமுதாய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் அந்த இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும். அதற்கு சர்க்கார் உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும்.

"மீதி உயர் ஜாதிக்காரர்கட்கு வீட்டு மதிப்பைப் பொறுத்த நஷ்டஈடு கொடுத்தால் போதும். மற்றும் பக்கங்களிலுள்ள ஊர்கள் பூராவும் தண்ணீர் ஏறி இருக்கிறது. அங்கு பார்த்தால் தண்ணீர் பொங்கிக்கொண்டிருக்கும். அப்படி இருக்கக்கூடிய ஹரிஜனங்கள் அல்லாதவர்கட்கு நஷ்ட ஈடு கொடுத்துவிட்டால் அவர்கள் அதை விட்டு வேறு இடங்களுக்குப் போய் வீடு கட்டிக்கொள்வார்கள். அவ்விதம் அவர்களைக் காப்பாற்ற முடியும்.

"இன்றைக்கு சில ஊர்களில் அதாவது தேவனப்பாளையம், சென்னிமலைபாளயம், மாப்பிள்ளைப்பெரியபாளையம் முதலிய ஊர்கள் பூராவும் நீர் கசிவின் காரணமாக மலேரியா என்ற ஜுரம் வந்திருக்கிறது. அந்த ஊரிலுள்ளவர்கள் மலேரியாவையே கண்டது இல்லை. ஆனல் இப்பொழுது அங்கு மலேரியா கண்டு 5, 6, 10 என்று மடிகிருர்கள். ஆகவே இதையும் கவனத்தில் வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

"அங்கே தண்ணீர் பல இடங்களில் பாய்வதன் காரணமாக P.W.D. டிபார்ட்மெண்டுக்கு தெரியப்படுத்தினேம். மெயின் வாய்க்கால், கிளை வாய்க்கால் ஓரங்களில் இருக்கும் ஊர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க முடியும், தூரத்தில் இருக்கும் ஊர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க முடியாது என்று சொன்னுர்கள். கிளை வாய்க்கால் போகும் இடங்களிலெல்லாம் வாய்க்கால்கள் வெட்டியதின் காரணமாக அங்கு விவசாயம் செய்ய சக்தி இல்லாதவர்களுடைய வயல்களின் வழியாக தண்ணீர் பாய்ந்து பக்கத்திலுள்ள வயல்களுக்குத் தண்ணீர் பாய்கிறது. அவ்விதம் பாயும்போது மத்தியிலுள்ள வயல்களில் தண்ணீர் திட்டு திட்டாக தேங்கி நிற்கிறது. அதனுல் அங்கேயுள்ள வீடுகளெல்லாம் விழுந்து விடக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. ஆகவே இவைகளைத்தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இது வரையிலும் சுமார் 500 வீடுகள் வீழ்ந்திருக்கின்றன. தண்ணீர் பாய்வது நின்றவுடனே சுமார் 80 ஊர்கள், முழு முழு ஊர்களின் வீடுகள் கீழே வீழ்ந்துவிடும். அதுவும் அடியோடு வீழ்ந்துவிடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

5-10 p.m. *SRI K. T. RAJU :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த லோயர் பவானி வாய்க்கால் ஓரங்களில் இருக்கக்கூடிய கிராமங்களில் மெயின் வாய்க்காலின் வழியாக தண்ணீர் வருவதால் அந்தந்த கிராமங்களின் ஓரத்தில் இருக்கும் வாய்க்கால்கள் வழியாக தண்ணீர் புகுந்து

16th February 1955] [Sri K. T. Raju]

வரும் போது அந்த ஊர்களை பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எந்தெந்த கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இப்பொழுது விவரமாக சொல்வதற்கில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு உடனடியாக அனுப்பி ரிபோர்ட் கொடுக்கும்படி சொன்னால், லோயர் பவானி வாய்க்கால் பிரதேசத்தில் எத்தனை கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை தெரிந்துக்கொள்ளமுடியும்.

"வாய்க்கால் வெட்டும்போது இப்படிப்பட்ட ஆபத்து ஏற்படும் என்று அவர்கள் எதிர் பார்த்திருக்கமாட்டார்கள். சர்க்காரும் எதிர் பார்க்கவில்லை. வாய்க்காலில் தண்ணீர் வந்த பிறகு தான் கசிவு கண்டு அங்குள்ள மண் சுவர்கள் ஈரங் கண்டு வீழ்து விட்டன. ஏற்கெனவே பல வீடுகளும், சுவர்களும் வீழ்ந்து விட்டன. இன்னும் பல சுவர்கள் கசிவு கண்டு விழும் நிலைமையில் இருக்கின்றன. அவ்விதம் ஆபத்து ஏற்பட்டிருப்பதால், ஜாதி ஹிந்துக்களுக்கும், குறிப்பாக ஹரி ஜனங்களுக்கும் பெரிய அளவுக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. அதில் ஹரிஜனங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்கள் தங்களுடைய குடிசைகளை இழந்து ரொம்பவும் பரிதாபகரமான நிலைமையில் இருக்கிறார்கள். அதைப் பற்றி அவர்கள் கலெக்டருக்கு விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிக்கும் விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். அந்த ஸ்தல மராமத்திலாகாவிற்கும் விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். ஆனால் இதை நிவர்த்தி செய்வதில் இந்த இரண்டு டிபார்ட்டுமெண்டுகளுக்கும் அதாவது ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கும், மராமத்து இலாகாவிற்கும் தகராறுகள் இருக்கின்றன. உதாரணமாக, வெள்ளோடு கிராமத்திற்கு அருகாமையில் ஊற்று தண்ணீர் இருக்கிறது என்று அதிகாரிகளுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டது. மராமத்து இலாக்காவை சேர்ந்த அதிகாரிகள் அது எங்களுக்கு சம்பந்தமில்லை என்று சொல்லி விட்டார்கள். அதே போல் ரெவின்யூ டிபார்ட்மெண்டு அதிகாரிகளும் எங்களுக்கு சம்பந்தமில்லை என்று சொல்லி விட்டார்கள். அதனால் இரண்டு அதிகாரிகளுக்குள் தகராறுகள் நடந்துக் கொண்டிருக்கிறது. அதேசமயத்தில் வீடுகளின் சுவர்கள் வீழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. இது சென்னை சர்க்கார் பாதுகாக்க வேண்டிய விஷயம். இவ் விஷயம் எந்த இலாகாவுக்குச் சம்பந்தப்பட்டது என்பதையெல்லாம் சர்க்கார் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. ஹரிஜனங்கள் வீடிழந்திருப்பது உண்மை. அந்தத் தொகுதியிலுள்ள எம்.எல்.ஏ. யாருக்கு விண்ணப்பம் போடுவது? எல்லா விண்ணப்பங்களையும் வாங்கி எடுத்துக்கொண்டு ஒவ்வொரு தடவையும் அதிகாரிகளைப் பார்ப்பதென்பது முடியாத காரியம், இது ரொம்ப அவசரமாகக் கவனிக்கப்படவேண்டிய பிரச்னை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணரவேண்டும்.

"வாய்க்கால் ஓரத்தில் குடிசை கட்டிக்கொண்டு வசித்து வந்த மக்கள் இப்பொழுது குடிசைகளை இழந்து கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது என்னவென்றால், பக்கத்தில் இருக்கும் நிலங்கள் கொடுக்கப்படவேண்டும். இடது புறம் தண்ணீர் பிரதேசமாக இருப்பதால் அங்கு நிலம் கிடைக்காது. வலது புறத்தில் பல இடங்கள் இருக்கின்றன. வாய்க்காலினால் ஆபத்து ஏற்பட முடியாத இடங்களில் இரண்டு அல்லது மூன்று எக்கர்களை வாங்கி வீடிழந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டும். வாய்க்கால் வெட்டுவதற்கு முன்னால் நிலங்கள் என்ன விலைக்கு விற்று வந்ததோ, அதே விலைக்கு பூமியை வாங்கி எதிர் பாராத விதமாக சம்பவம் நிகழ்ந்து விட்டதன் காரணமாக ஜனங்கள் வீடிழந்து தவிப்பதினால், அவர்களுக்கு நிலம் வழங்கப்படவேண்டும். சர்க்கார் இது விஷயத்தில் உடனடியாக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"கீழ் பவானி வாய்க்காலினால் சத்தியமங்கலத்திலிருந்து, தாராபுரம் வரை உள்ள பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான எக்கர் நிலங்கள் உரம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. தார் ரோடுகளை அறுத்துக்கொண்டு போகப் பட்டிருக்கும்போது மண் குடிசைகள் எம்மாத்திரம்?. பத்து வருஷங்கள்

மராமத்து செய்தால் தான் தண்ணீர் கசிவைத் தடுக்க முடியும். உடனடியாக தடுத்துவிடக்கூடிய காரியம் அல்ல. கருங்கல், செங்கல் கட்டிடங்களானாலும் தண்ணீர் கசிவினால் பாதிக்காது. ஆனால், மண் சுவர் உள்ள குடிசைகள் தாங்க முடியாது. ஹரிஜனங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பதால் இது விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். கனம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். ரெவினியூ டிவிஷனல் அதிகாரியோ, கலெக்டரோ, மராமத்து இலாகா அதிகாரிகளோ அல்லது எல்லோரும் சேர்ந்தோ ஹரிஜனங்களை எப்படியாவது பாது காக்கவேண்டும். ஜாதி இந்துக்களிலும் ஏழைக் குடியானவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அது அவசரமானதும், பிரத்யேகமானதுமான பிரச்னை. வாய்க்கால் வெட்டியதால் எதிர்பாராத விதமாக ஏற்பட்டிருக்கும் பிரச்னை இது. வாய்க்கால் வெட்டியது தப்பு என்று நான் சொல்லவில்லை. ஆனால், மக்களைக் கஷ்டத்திலிருந்து தப்புவிக்க வேண்டும். இந்த விஷயத்தில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். வீடிழந்த ஹரிஜனங்களிடத்தில் நிலம் வாங்குவதற்குப் பணம் கிடையாது. விவசாயத்திற்கு உதவியாக கால்வாய் வெட்டப்படுவதினால் அபிவிருத்தி வரி விதிக்கப்படுவதனால், அந்தப் பணத்திலிருந்தாவது ஒரு பகுதியை எடுத்து வீடிழந்த ஹரிஜனங்களுக்கு நிலம் கொடுப்பதற்கு சர்க்கார் வகை செய்யவேண்டும். வீடு கட்டிக்கொள்வதற்கு வசதியும் செய்து கொடுக்கவேண்டும். ஹரிஜனங்கள், ஜாதி இந்துக்கள் என்று வித்தயாசமில்லாமல் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் வீடு கட்டிக்கொள்ள நிலம் வாங்கிக் கொடுக்க வேண்டுமாய் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இது விஷயத்தில் உடனடியாக கவனம் செலுத்துவார் என்றும் நான் நம்புகிறேன்.''

* **SRI P. G. MANICKAM** :—'' மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இப்பிரச்னையில் சம்பந்தப்பட்டிருக்கும் ஹரிஜனங்கள் அனேகமாக எனது தொகுதியைச் சேர்ந்தவர்கள். கோபி தாலூகா முழுவதுக்கும் தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. அங்குள்ள ஹரிஜனங்கள்தான் இதனால் இப்பொழுது பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் சேரிகளுக்குச் சென்று பார்த்ததிலிருந்து இந்த விஷயம் உண்மையானது என்று கனம் மந்திரி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'' சிறு மண் குடிசைகளில் ஏழை ஹரிஜனங்கள் வசித்துக்கொண்டிருந்தார்கள். மண் சுவர் ஆதலால் தண்ணீர் போகும்போது விழுந்துவிட்டன. அது மிகவும் பரிதாபமான நிலைமை. சாதாரணமாக ஒரு குடிசையில் இரண்டு அல்லது மூன்று ஹரிஜனக் குடும்பங்கள் அடைந்து கொண்டிருப்பார்கள். பன்றிகளை அடைத்து வைக்கும் இடம்மாதிரி இருக்கும். அந்தக் குடிசைகளும் விழுந்து விட்ட பிறகு ஹரிஜனங்கள் எப்படி அங்கு குடியிருக்க முடியும் ? அந்த இடங்களில் சுகாதாரம் குறைவதினால் மலேரியா போன்ற வியாதிகள் உண்டாகி மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது விஷயமாக நான் அதிகாரிகளிடத்திலும் தெரிவித்திருக்கிறேன். அவர்களும் எந்த முறையில் இப்பிரச்னைக்குப் பரிகாரம் காண்பது என்று தெரியாமல் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

'' சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பணம் கொடுக்க அதிகாரிகள் தயாராயிருக்கிறார்கள். ஆனால், வீடு கட்டுவதற்கு ஆகும் செலவில் பாதிப் பணம் ஹரிஜனங்கள் கொடுத்தால்தான், இன்னொரு பாதியை அதிகாரிகள் கொடுக்கமுடியும் என்று சொல்கிறார்கள். மக்களிடமிருந்து பாதிப் பணம் வந்தபிறகுதான் அதிகாரிகள் மற்றொரு பாதியைக் கொடுக்கலாம் என்று சட்டம் இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். ஹரிஜனங்கள் பணத்திற்கு என்ன செய்வார்கள் ? அவர்கள் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்ட் திட்டப்பிரகாரம் ஒரு சிறிய குடிசை கட்டவேண்டுமானால், 400, 500 ரூபாயாவது ஆகும். அதில் பாதிப்பணமாகிய 200, 250 ரூபாய் இவர்கள் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், அவர்கள் என்ன செய்யமுடியும் ? அவர்கள்

16th February 1955] [Sri P. G. Manickam]

எப்படிப் பணத்தைக்கொண்டுவரமுடியும், எப்பொழுது வீடு கட்டமுடியும் என்பதை நாம் யோசித்துப்பார்க்கவேண்டும். இதைப்பற்றி நான்அதிகாரி களிடத்தில் கேட்டபோது, 'நீங்கள்தான் ஒழுங்குபண்ணவேண்டும், நாங் கள் தயாராயிருக்கிறோம்,' என்று அதிகாரிகள் தெரியப்படுத்துகிறார்கள். இதனால் ஒருவேலையும் நடக்கவில்லை. ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப் படாமல் அப்படியே இருக்கிறது. அந்தப் பணத்தை நியாயமான முறை யில் செலவு செய்யலாம். எதோ ஒரு இடத்தில் காலனி கட்டி 15, 20 வீடுகள் கட்டுவதற்கு பணம் செலவழிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஒதுக்கப் பட்ட பணம் அனேகமாக அப்படியேதான் இருக்கிறது. அந்தப் பணத் தைக்கொண்டு இப்பொழுது கஷ்டப்படுகிற இந்த ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு ஒரு வசதி செய்தால் மிக நலமாக இருக்கும். பாதி சமுதாய திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டால் பாதிப் பணத்தை அவர்களுக்கு சர்க்கார் இனாமாகக் கொடுக்கவேண்டிய வழி செய்தாகவேண்டும். இல்லாவிட் டால் கம்யூனிடி ப்ராஜெக்ட்காரர்களே பாதிப்பணத்தை போட்டு செலவழித்து விட்டாலும் அந்தப் பணத்தை 25 வருஷத் தவணைகளில் கொஞ்சங்கொஞ்ச மாக வருமானத்திலிருந்து கொடுத்துவிடுவார்கள். இருபத்தைந்து வரு ஷத் தவணைகளில் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ளஅரசாங்கம் ஏதாவது வழி செய்யவேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள முடியுமே தவிர வேறு விதத்தில் முடியாது.

"அவர்களுக்கு நிலத்தை மட்டும் கொடுப்பதால் எந்த விதமான பிரயோஜனமும் கிடையாது. பணம் இல்லமால் வெறும் நிலத்தில் எப் படி வீடு கட்டுவது? மிகச் சிறிய குடிசை போடவேண்டுமானாலும் குறைந்த பட்சம் 100 முதல் 200 ரூபாயாவது ஆகாதா? சமுதாய அபிவிருத்தித் திட்டத்திலிருந்து பாதிப் பணம் கிடைத்தாலும் மறு பாதியை ஹரிஜன நல இலாகாவிலிருந்தாவது வீடு கட்டிக்கொள்வதற்குக் கொடுத்தால் நல்லது. எந்த முறையிலாவது இலவசமாக அவர்களுக்குப் பாதிப் பணம் கிடைத் தாகவேண்டும். கூட்டுறவு சங்கங்கள் அவர்களுக்கு இருபது வருஷத் தவணைகளில் திருப்பித் தர கடனாகப் பணம் கொடுக்கலாம். சமுதாய நிலத் திட்டத்திலிருந்து பாதிப் பணத்தை வாங்கி, இன்னொரு பாதியை சர்க்காரிடமிருந்து இலவசமாகவோ, கூட்டுறவு சங்கங்களிலிருந்து கடனாக வோ கொடுக்க ஏற்பாடு செய்வதற்கு வகை செய்யவேண்டும். சர்க்கார் மனது வைத்தால் இது செய்யமுடியாத காரியம் அல்ல. மராமத்து மந்திரி அவர்களும், ஹரிஜனநல மந்திரியும் கலந்துபேசி, மந்திரிசபையும் இதை ஆலோசனை செய்து இதில் நல்லதொரு முடிவுக்கு வந்து எப்படி யாவது ஹரிஜனங்களுக்கு வீடு கட்டவேண்டியது அவசியம்.

"கோயமுத்தூர் ஜில்லாவில் ஹரிஜனங்களுடைய நிலைமை மிக மோச மாக இருக்கிறது. எத்தனையோ ஹரிஜனங்கள் வீடில்லாமல் இருக்கிறார் கள். வருஷா வருஷம் சட்ட சபையில் கேள்விகள் கேட்கப்படுகிறது. வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படாமல் 'லாப்ஸ்' ஆகி, திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. வீடு கட்டும் திட்டமே கோயமுத் தூர் ஜில்லாவில் சரியானபடி நிறைவேறவில்லையென்று நினைக்கி றேன். ஹரிஜன முன்னேற்றத்தை உத்தேசித்து அவர்களுக்கு பிரத்யேகமாக திட்டம் தயாரித்து அதன் மூலமாக வீட்டு மனைகள் கிடைப்பதற்கு வசதிகள் செய்யலாம். ஈரோடு, பவானி, கோபி, தாரா புரம் ஆகிய நான்கு தாலூகாக்களை சமுதாய நலத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டு, அங்குள்ள சேரிகளை கவனிப்பதற்கு ஒரு கமிட்டியை கவர்ன் மெண்டார் நியமித்து அவர்கள் மூலமாக என்ன காரியங்கள் செய்ய வேண்டுமென்பதைப் பரிசீலிக்கவேண்டும். இது மிகவும் முக்கியமான காரி யம். மனிதனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் அவசி யம் ஆகையால், இவ்விஷயத்தில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக் காவிட்டால் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பார்கள். சர்க்கார் இதற்குத் தக்க பரிகாரம் தேடி ஹரிஜனங்களுக்கு நல்வாழுவு அளிக்க முன்வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்."

[16th February 1955

5-20 p.m. * SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, Sir, this raises an important issue with regard to the obligation of the Government directly converse to the right of the Government in regard to the betterment levy. The Government were coming forward with a betterment levy because they said on account of the efforts and expenditure of the Government the owners of land have been enabled to increase the income from their lands and therefore Government were entitled to claim a portion of that increased income. It therefore follows, in cases where loss or hardship is caused to the people, directly attributable to the projects undertaken by Government, they must necessarily indemnify the persons who are the victims of such loss or hardship. I would go further and say that the Government should in all their magnanimity allow the benefits to be enjoyed by the people concerned, without any betterment levy. But I submit that they cannot abandon the obligation to indemnify the persons who have suffered loss. Such loss was suffered by many people on account of the execution of two projects recently, namely, the Lower Bhavani and the Malampusha and this has been brought before the House very often. Government have rested very often on purely very legal and technical grounds. When large number of persons are dispossessed and rendered homeless and find themselves destitute, the Government say that their obligation is at an end when they acquire the land and pay the money according to the land acquisition rules whether the persons driven out of the land get any portion of the compensation or not.

" Then, Sir, as has been pointed out by the Hon. Member who initiated the debate the Government officials take an attitude that they are liable to pay for loss or damage caused only within certain limits. I submit we cannot accept any such arbitrary limitations, or restrictions with regard to distance. If a house tumbles down on account of a channel being excavated through a particular area, necessarily the Government must make good the loss. If it were a private person and if he does anything, digs a channel whether by the side of my house or far off and if it can be proved that I have suffered loss, my house has fallen on account of that, I am certainly entitled to be indemnified. As it has been pointed in all these cases the houses belong to Harijans, at least a majority of them belong to Harijans. We know they are unable to protect themselves and they also do not get any protection from the laws that are intended to protect them. Therefore it is out of question for these people to go to court or to establish a claim as against the Government. Therefore the Government themselves must take a lenient and generous view of the matter and without looking too much to rules—I do not say that anybody and everybody must be indemnified—if the Government are satisfied that hardship has really been caused and there is justice in the demand, out of anything that has been done or purported to be done by or on behalf of

16th February 1955] [Sri M. Narayana Kurup]

Government, it behoves the Government that they should go to the rescue of those persons. Therefore I agree with the mover that the Government should take immediate steps in the matter.''

* **Sri B. K. NALLASWAMI** :—" கனம் சபா நாயகர் 5–25 p.m.
அவர்களே, கீழ் பவானி அபிவிருத்தி திட்டம் சபையில் வந்தபோது இந்த விஷயத்தை நான் பிரஸ்தாபித்தேன். ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் மூழ்கிப் போன நிலங்களுக்கு காம்பன்சேஷன் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்லுகிறேன் என்று நினைத்துப் பதில் சொல்லிவிட்டார்கள். பவானிசாகர் பிரதேசத்தை விட மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்தில் அதிகமான சேதம் ஏற்பட்டிருக்கிறது. காரணம் இங்கு நஞ்செய் வேளாண்மையில் தண்ணீர் விடப்பட்டிருப்பதால் தண்ணீர் உறம்பு எடுத்து அழுந்தியிருக்கிறது. இப்பொழுது தான் மேட்டுப் பிரதேசங்களில் சேரி நிலம் வாங்கிக் கொடுத்தோம். உறம்பெடுத்த தண்ணீரை வேறிடத்தில் ஒரு டிச்சுக்கு கொண்டு போனால் தான் ஊரிலேயே போக முடியும். இதே மாதிரி நிலைமைதான் வேறொருயிடத்திலும் இருக்கிறது. நெருப்பு பிடித்தபோதும், வெள்ளம் வரும்போதும் நிவாரணம் அளிப்பதற்காக கலெக்டரிடம் ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்திலிருந்து பாதிக்கப்பட்டிருக்கும் ஹரிஜனங்களுக்கு புறம்போக்கு நிலங்களைக்கொடுத்து, நிதியிலிருந்து ஒரு தொகையையும் கொடுத்து, அவர்களுக்கு பனைமரம், ஓலை போன்றவைகளை இனமாக அரசாங்கம் கொடுத்து உதவினால் தக்க பரிகாரம் செய்தவர்களாவோம். கோவாப்ரேடிவ் சொஸைடி மூலமாகவோ, ஐந்து வருஷ திட்ட மூலமாகவோ கம்யூனிடி பிராஜக்ட் செலவிட நேரம் இல்லை. இது ரெவின்யூ அதிகாரிதான் செய்யக்கூடிய விஷயம். ஆதலால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஏழை ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு மூங்கிலும் பனைமரமும் இனமாக அவர்களுக்குக் கொடுப்பதற்கு உடனடியாக கலக்டருக்கு உத்திரவு போட்டு பரிகாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்."

* **Sri R. KRISHNAN** :—" മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, ഇവിടെ പുറപ്പെടുവിച്ച 5–28
അഭിപ്രായങ്ങളോടു ഞാൻ തികച്ചും യോജിക്കുന്നു. എന്റെ അനുഭവത്തിൽ അണക്കെട്ടു p.m.
